# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | தாயின் பாசம் | 3 |
| 2 | அம்மாவின் பெருமை | 4 |
| 3 | தாய்மையின் உன்னதம் | 5 |
| 4 | கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவின் அம்மா | 6 |
| 5 | ஒரு தாயின் வேதனையான கேள்வி | 7 |
| 6 | புதிதாக திருமணம் ஆன மகனுக்கு தாய் கூறும் அறிவுரைகள் | 8 |
| 7 | தாய் கவிதைகள் | 9 |
| 8 | அம்மாவின் பெருமை | 10 |
| 9 | தாய்மையின் சிறப்பு | 11 |
| 10 | அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ? | 12 |
| 11 | தாய் | 13 |
| 12 | அம்மா நீ சும்மா தானே இருக்கே | 14 |
| 13 | இரண்டு தேவதைகள் | 15 |
| 14 | Who is a Father | 16 |
| 15 | அன்புள்ள அன்பு உள்ள இடத்தில்தான் நம்பிக்கை இருக்கும் | 17 |
| 16 | அப்பா மகள் போட்டோ | 18 |
| 17 | அப்பா | 19 |
| 18 | அப்பா என்னை மன்னிப்பீர்களா | 20 |
| 19 | பெற்றோர்கள் பெற்றோர்களை கவனித்தல் மகன் கடமையா? அல்லது மகள் கடமையா? | 21 |
| 20 | தன் மகனுக்கு வயதான அப்பாவின் ஒரு கடிதம் | 22 |
| 21 | தந்தையும் மகளும் | 23 |
| 22 | சுதந்திரமாக இருக்க விரும்பிய மகள் | 24 |

| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 23 | அப்பா இன்று இல்லையே | 25 |
| 24 | அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது | 26 |
| 25 | இது அப்பாவை நேசிப்பவர்களுக்கானது | 27 |
| 26 | அப்பாவுக்கு மகள் எழுதும் மனம் கவர்ந்த கவிதை | 28 |
| 27 | அப்பா இன்று இல்லையே | 29 |
| 28 | Dear Dad | 30 |
| 29 | நிழலும் நிஜமும் | 31 |
| 30 | தவமாய் தவமிருந்து | 32 |
| 31 | இல்லற வாழ்க்கை மிகச் சிறப்பாக அமைந்திட | 33 |
| 32 | நூல் அறுப்பது கடினமே | 34 |
| 33 | மனிதநேயம் இதுதான் | 35 |
| 34 | கணவனின் மௌனம் | 36 |
| 35 | அற்புதமான தம்பதியினர் | 37 |
| 36 | எப்பொழுது பரிகொடுத்தேன் மகனே | 38 |
| 37 | முதல் மரியாதைக்குரிய வெட்டியான் சின்னத்தம்பி | 39 |
| 38 | மனிதாபிமானம் | 40 |
| 39 | GREAT TEACHERS | 41 |
| 40 | ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும்? | 42 |
| 41 | என் கனவு ஆசிரியர் | 43 |
| 42 | ஆஹா ஆசிரியர் | 44 |
| 43 | இதுவும் மனிதநேயமே | 45 |
| 44 | தாம்பத்தியம் | 46 |
| 45 | லாபக் கணக்கா? அல்லது புண்ணிய கணக்கா? | 47 |
| 46 | சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது நிகழ்ந்த ஒரு உண்மை நிகழ்ச்சி | 48 |

# தாயின் பாசம்...!

பழங்காலத்தில் ஜப்பான் நாட்டில் விசித்திரமான ஒரு பழக்கம் இருந்து வந்தது. பெற்றோர்கள் வயதாகி முதுமையின் காரணமாக ஆற்றல் குறைந்து மற்றவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டால், அவர்களைத் தூக்கிக் கொண்டு போய் உயரமான மலையின் மேல் வைத்து விட்டு வந்து விடுவார்கள்! எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ள அம்முதியோர்கள் பசி, தாகத்தினால் தனிமையில் வாடி வதங்கி மடிவார்கள்.

இப்படியான சூழ்நிலையில், ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயைச் சுமந்து கொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். தாய் மகன் இருவருமே எதுவும் பேசவில்லை.

ஆனால், சிறிது நேரத்தில் தன் தோளில் இருந்த தாயார் ஏதோ ஒருவித மணம் கொண்ட மரங்களின் சின்னச்சின்ன கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருவதை மகன் அறிந்தான்.

உடனே.. “அம்மா.. ஏதோ ஒரு மாதிரியான மரத்தின் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக்கொண்டே வருகிறீர்களே.. ஏன்?” என்று கேட்டான்.

அதற்கு தாயார், “மகனே.. நீ என்னை மலை மீது விட்டு விட்டு வீடு திரும்பும்போது வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா? இங்கே போடப்பட்டுள்ள கிளைகளை கவனித்து நடந்தால் வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய் சேரலாம். அதற்காகவே கிளைகளை அடையாளமாகப் போடுகிறேன்” என்றாள்.

வயதாகி விட்ட தன்னை தவிக்க விட்டுச்சென்றாலும் மகன் பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டும் என்று நினைக்கும் பாசமிகுந்த இந்தத் தாயா பயனற்றவர் என்று உள் மனம் கேட்க, அவன் தன் தாயை மீண்டும் தன் வீட்டுக்கே அழைத்து வந்து பாசத்துடன் கவனிக்கலானான்.

★ ★ ★

# அம்மாவின் அருமை...!

பிறந்த வீட்டை விட்டு புகுந்த வீடு
போகும் வரை தெரியவில்லை
அம்மாவின் அருமை...

எட்டு மணிவரை தூங்கினாலும்
எழுப்ப யோசித்த அம்மாவின் அருமை
ஐந்து மணிக்கு அலாரம் அடித்தபோது தெரிந்தது!

படித்த புத்தகத்தை படுக்கையிலே போட்டாலும்
பார்த்து எடுத்து வைத்த அம்மாவின் அருமை
எதையும் எடுத்த இடத்தில் வைக்க வேண்டும்
என்ற போது புரிந்தது!

பசித்த நேரத்தில் சோறூட்டிய
அம்மாவின் அருமை
பத்துப்பாத்திரம் தேய்க்கையில் தெரிந்தது!

என்னை பத்து மாதம் சுமந்த அம்மாவின் அருமை
எனக்கு குழந்தை பிறக்கையில்
முற்றிலும் புரிந்தது.

★ ★ ★

# தாய்மையின் உன்னதம்

“அம்மா, ஏன் இந்த ஏழைக்குடிசைக்கு வந்தே? அங்கே, தம்பி வீட்ல ஏ.ஸி., கார், நல்ல சாப்பாடு, கலர் டி.வி, மருமகளும் நல்லாதானே கவனிச்சா? இங்க கொசுக்கடி, நல்ல ஃபேன் கூடக் கிடையாது. ரேஷன் அரிசி, தண்ணி கஷ்டம், பாதி நாளும் காலை டிஃபன் செய்யக்கூட வசதியில்ல. வயசான காலத்துல, நீயாவது தம்பியோட சுகமாக இருக்கக் கூடாதா? எனக்குத்தான் படிப்பு வரல. வாய்க்கும், கைக்குமா ரெண்டு குழந்தைகளோட கஷ்டப் படறேன். உன்னையும் கஷ்டப்படுத்தணுமா?” வாசு ஆதங்கத்துடன் பேசினான்.

“வாசு பேசி முடிச்சிட்டியா? நீங்க ரெண்டு பேரும் நான் பெத்த பிள்ளைங்க. நீ இங்கே கஷ்டப்படும்போது நான் மட்டும் சுகத்தை அனுபவிக்க முடியுமா? நான் இங்கே இருந்தா, உன் தம்பி, மாசம் ரெண்டாயிரம் ரூபாய் என் செலவுக்குக் கொடுக்கிறான். அதில் இங்கே கொஞ்சம் மளிகை சாமான் வாங்கிப் போடுவேன். உன் பிள்ளைகளுக்குப் ஃபீஸ் கட்டலாம். நான் அங்கே இருந்தா, அவனைக் கண்டிப்பா அண்ணனுக்குக் குடுன்னு சொல்ல முடியாது. அங்கே ராஜ உபசாரம் செஞ்சாலும் உன் குழந்தைகளை விட்டுவிட்டு நான் மட்டும் பாலும் பழமும் சாப்பிட மனம் இடங்கொடுக்குமா? நான் பழுத்து, உதிரப் போகும் மட்டை. எனக்கு எதுக்குப் போஷாக்கு? துளிர்க்க வேண்டிய செடிகளுக்குத்தானே உரம் போட வேணும்?” என்றார் அம்மா. வாசு, தாய்மையின் உன்னதத்தைப் புரிந்து கொண்டான்.

★ ★ ★

# கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவின் அம்மா!

திருமதி. நாகலட்சுமியின் சில புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக வலம் வருகிறது. உலகக்கோப்பை செஸ் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்து இந்தியாவிற்குப் பெருமை சேர்த்திருக்கும் பிரக்ஞானந்தாவின் தாயார். உலகக்கோப்பை செஸ் தொடரின் கால் இறுதிச் சுற்றில் வெற்றி பெற்று பிரக்ஞானந்தா பேட்டி கொடுத்த போது பெருமிதத்துடன் தன் மகனைப் பார்த்துக் கொண்டிருந்த நாகலட்சுமி, பிறகு தனியாக சென்று அமர்ந்து தன் ஆனந்தக் கண்ணீரைச் சேலையின் தலைப்பால் துடைத்துக் கொண்டார். இந்தத் தருணங்களை ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் மரியா அவர்கள் படம் எடுத்து விட்டார்.

" ஆட்டத்தை ஓரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். பிரக்ஞானந்தா எப்படி விளையாடுகிறார் என்ற சிந்தனை மட்டுமே என் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. என் புகைப்படங்கள் வைரலான பிறகுதான் தெரிய வந்தது. அவர்கள் போட்டோ எடுத்தது கூட எனக்குத் தெரியாது", என்று வெகுளியாகச் சொல்லும் நாகலட்சுமி தன் மகனின் பாச நிழலாகப் பயணித்து வருகிறார்.

"சிறு வயதில் பிரக்ஞானந்தாவும், அவர் சகோதரியும் அதிக நேரம் டிவி பார்க்கும் வழக்கம் கொண்டு இருந்தார்கள். அதைத் தவிர்க்கவே பிரக்ஞானந்தாவை செஸ் வகுப்பில் சேர்த்தேன்" என்று சொல்லும் நாகலட்சுமி, பிரக்ஞானந்தா செஸ் விளையாட்டில் ஈடுபாடு காட்ட தொடங்கிய காலத்தில் இருந்து பயிற்சிகளுக்கும் போட்டிகளுக்கும் மகனுக்கு உறுதுணையாக, தானும் செல்லத் தொடங்கி விட்டார்.

"போட்டிகளுக்குத் தன் மகனை அழைத்து வருவார். பின்னர் எங்கேனும் ஓரத்தில் அமர்ந்து மகன் வெற்றி பெற வேண்டி பிரார்த்தனைச் செய்வார். எவ்வளவு நேரம் பயிற்சி நடந்தாலும் பொறுமையாகக் காத்திருந்து மகனை அழைத்துச் செல்வார்" என்று நாகலட்சுமியின் அர்ப்பணிப்பு உணர்வு குறித்து சொல்கின்றனர் பயிற்சியாளர்கள்.

போட்டிகள் உலகின் பல்வேறு நாடுகளில் நடக்கும் அதன் பருவ நிலைகளை, மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். இவை எதுவும் தன் மகனை அண்டி அவரின் ஒருமுகத்தன்மையைக் குலைத்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். மகன் சோர்வு அடைந்து விடாமல் பார்த்துக் கொள்வதைத் தன் முதல் கடமையாக கொண்டிருக்கும் இவர், தன் மகனுக்கான உணவுகளையும் பார்த்துப் பார்த்து சமைப்பார். போட்டி அரங்கிற்கு வந்து தன் மகன் விளையாடுவதை கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பார். போட்டியின் இடைவேளையின் போது மகனின் சோர்வு போக்கும் விதமாக ஊக்குவிப்பதும் இவரே.

சதுரங்கத்தின் சாதனைச் சிகரங்களை நோக்கிப் பயணிக்கும் தன் மகன் பிரக்ஞானந்தாவின் கைப்பற்றி தொடர்ந்து வரும் நாகலட்சுமிக்கு, செஸ் விளையாடத் தெரியாது என்பது சுவாரஸ்யமான விஷயம்.

*****

# ஒரு தாயின் வேதனையான கேள்வி

கேள்வி:

என் மகளின் புகுந்த வீட்டில் அவளது மாமனார் கடுமையாக நடந்து கொள்கிறார். எங்களிடமும் மிரட்டலாகப் பேசுகிறார். மகனை கைக்குள் போட்டுக்கொண்டு எங்கள் வாழ்க்கையைப் பாழாக்கி வருகிறார். தினசரி காலையில் எழுந்ததும் என் மகள் என்ன பாடுபடுகிறாளோ என்ற வேதனையோடுதான் நான் கண் விழிக்கிறேன். எந்த தெய்வத்தை வழிபட்டால் எங்களுடைய துன்பம் தீரும்?

எழுத்துச்சித்தர் திரு பாலகுமாரனின் பதில் :

உங்கள் நிலைமை எனக்குத்தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. மகளைப் பெற்ற எல்லா பெற்றோரும் அடி வயிற்றில் ஒரு பயத்தை சுமந்து கொண்டுதான் இருக்க வேண்டும். குழந்தைகள் சிறப்பாக வாழ இடையறாது ஒரு கவலையை அனுபவித்துதான் ஆக வேண்டும்.

ஆனால், இந்தக் கவலையிலிருந்து மீட்சி பெற நல்ல விஷயங்கள் உண்டு. அதற்கு பிரார்த்தனை என்று பெயர். இந்தப் பிரார்த்தனையை வெறுமே வெட்ட வெளியில் சொல்லாது ஒருமுகப்படுத்துகிற விஷயங்கள் தான் விக்ரக ஆராதனைகள், மந்திர உச்சாடனங்கள். இந்தச் சம்பவம் நீர்த்துப்போகாமல் ஓர் கொடுமைக்காரனை நேர் செய்ய வேண்டி முயற்சிக்க வேண்டும். பிரார்த்தனையால் உங்கள் குழந்தை சுகம் பெறுவாள். உங்கள் வீடு வளம் பெறும்.

ப்ரத்யங்கரா என்ற தேவதை உண்டு. அந்த ப்ரத்யங்கரா வழிபாடும் முரட்டுத்தனமாக, மூர்க்கத்தனமாக, எகிறுபவர்களை அடக்குவதற்கு உதவி செய்யும். உங்களை நோக்கி சீறுகிறவர்களை தலையில் தட்டி உட்கார வைக்கும்.

ப்ரத்யங்கராவோடு கோயிலில் இருக்கின்ற காலபைரவர் உபாசனையும் அதற்கு உதவி செய்யும். ப்ரத்யங்கரா தேவி கோயிலுக்குப் போய் கை கூப்பி, மனம் உருகி பிரார்த்தனை செய்யுங்கள். காலபைரவர் சன்னதியில் உட்கார்ந்து அவருடைய மூல மந்திரம் சொல்லி, உங்கள் குழந்தையின் துன்பம் நீங்க மன்றாடுங்கள்.

அம்மாதிரியான தலங்களுக்குப் போய் உங்கள் மகளுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். உங்களைத் துன்புறுத்துபவர்களின் அட்டகாசம் நிச்சயம் குறையும்.

மரணபயம் மிகப்பெரிதான விஷயம். எல்லா ஆட்டங்களையும் அது அடித்து நொறுக்கும். கால் தடுக்கி விழுந்தால் மரணமடைகின்ற வாழ்க்கை உன்னுடையது என்று அறிவுறுத்தும்.

அமைதியற்ற குணம்தான் ஆரவாரமாக அலைகிறது. அதுதான் அடுத்தவரை தூஷிக்கிறது என்று புரிய வைக்கும். கால் வலியோ, நெஞ்சு வலியோ, கண்ணீரோ, மூல வியாதியோ, நெற்றி தலைச்சூடோ அம்மாதிரி ஆரவாரமான ஆட்களுக்கு நிச்சயம் ஏற்படும். அவை அதிகரிக்கிற பொழுது அவர்கள் மௌனமாகக்கூடும்.

இந்தப் பிரார்த்தனையை ஒருவர் செய்ய, அவருக்கு தொந்தரவு கொடுத்தவர் துவண்டு போனதை நான் நன்கு அறிவேன். அறிவால் எதிர்க்க முடியாத போது தெய்வத்தின் துணை உங்களை தீயவரிடம் இருந்து நிச்சயம் காப்பாற்றும்.

ப்ரத்யங்கரா வழிபாடும், காலபைரவர் வழிபாடும் இடைவிடாது செய்யுங்கள். உங்கள் மகளின் வாழ்க்கை மேன்மை நோக்கி நகருவதை நீங்கள் உணர்வீர்கள்.

*****

# புதிதாக திருமணம் ஆன மகனுக்கு தாய் கூறும் அறிவுரைகள்

1. மகனே மறந்து கூட என்னை உன் மனைவியோட ஒப்பிட்டுப்பார்க்காதே. உன் அம்மாவுக்கு குடும்ப வாழ்க்கையில் இருபது ஆண்டு கால அனுபவம் இருக்கு. ஆனா, உன் மனைவி உன்னை மாதிரிதான். இந்த வாழ்க்கைக்குப் புதுசு. உன்னை நான் வளர்த்த மாதிரிதான், அவுங்க அம்மாவும் அவளைப் பார்த்துப் பார்த்து வளர்த்து அனுப்பியிருக்காங்க.. அவளுக்குக் கொஞ்சம் ஆண்டுகள் தேவைப்படும். அதுக்கப்புறம் உன் குழந்தைக்கு அருமையான அம்மாவாக அவள் இருப்பாள்.

2. மனைவி உனக்கு அம்மா இல்லை.. தோழி..!!. உன் அம்மாவுக்கு உன்னை கவனிக்கறது மட்டும்தான் வேலை. ஆனால் உனக்கு உன் மனைவியை நன்றாக கவனிக்கிறது முக்கியம். நீங்க இரண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் கவனிச்சி அன்பு செலுத்துறது மிக மிக முக்கியம்.

3. உன் மனைவியை மதிக்க வேண்டும். உன் ஒவ்வொரு முன்னேற்ற படியிலும் அவள் பங்கு உள்ளது. அவள் கருத்துக்களைக் கேட்டு முன்னுரிமை கொடுத்து வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இரு. அவள் உன் வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள், நல்லது கெட்டது அனைத்திலும் உன் உடன் இருந்து பங்கு கொள்ளப் போகிறவள்.

4. மனைவியை நம் வீட்டில் இயல்பாக உணர வைக்க உதவி செய். பிறந்து, வளர்ந்து மகிழ்ந்திருந்த பிறந்த வீட்டை விட்டு நம் பொருட்டு புகுந்த வீட்டுக்கு வந்திருக்கா உன் மனைவி. அவளை இயல்பாக இருக்க வைக்க நீதான் உதவணும். சின்னச்சின்ன விஷயங்கள் கூட அவளுக்கு சங்கடத்தைத் தரலாம். அதை நீதான் கவனித்து அவள் பிறந்த வீட்டில் இருப்பதைப் போல உணர வைக்கனும்.

5. எப்பவும் மனைவியை நேசிக்க வேண்டும். சின்னச்சின்ன சர்ப்ரைசிங்காக பரிசுகள், வெளியே அழைத்துக்கொண்டு போவது, அவள் டிரசிங்கை பாராட்டி பேசறது, சந்தோஷமா வாய் விட்டு சிரிக்கிறது மாதிரியான விஷயங்கள் உங்கள் இரண்டு பேரையும் எப்பொழுதும் இளமையா உணர வைக்கும்.

சுருக்கமா, உங்க அப்பா என்னை எப்படி நடத்தறாரோ அது போல நீயும் உன் மனைவியை கௌரவமா மதிச்சிக்குடும்பம் நடத்து..!

Hello Sir,
Calling from old-age home. We saw your advertisement of missing dog. It has come here and is playing with your mother.

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்.
கண்கள் இல்லாமல் ரசித்தேன்.
காற்றே இல்லாமல் சுவாசித்தேன்.
கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன்.
எங்கே?
என் தாயின் கருவறையில் மட்டுமே!

**முகத்தை காணும்
முன்பே நேசிக்கத்
தெரிந்தவள்**

**'தாய்'**

மறு பிறவி இருந்தால்
செருப்பாக பிறக்க வேண்டும்.
என் அம்மா காலில் மிதி பட
அல்ல. என்னை சுமந்த அவளை
ஒரு முறை நான் சுமப்பதற்காக...!

எந்தப் பொய்
சொல்லியும் அம்மாக்களை
ஏமாற்றிவிட முடியும்.
'சாப்பிட்டு விட்டேன்' என்கிற
அந்த ஒரு பொய்யைத்தவிர!

நீ அழுவதைப் பார்த்து
உன் அம்மா
சிரித்த ஒரே ஒரு நாள்
நீ பிறந்த நாள்!

எனக்கு காய்ச்சல் வந்தால்
மருந்து தேவையில்லை.

அடிக்கடி வந்து தொட்டுப்பார்க்கும்
அம்மாவின் கையே போதுமானது.

மழையில் நனைந்து வந்த என்னை
எல்லோரும் திட்டினார்கள்.
ஆனால்..
என் தலையைத் துவட்டியபடியே
அம்மா திட்டினாள் .. மழையை.

# அம்மாவின் பெருமை

பழங்காலத்தில் ஒரு நாட்டில் விசித்திரமான ஒரு பழக்கம் இருந்து வந்தது. பெற்றோர்கள் வயதாகி முதுமையின் காரணமாக ஆற்றல் குறைந்து மற்றவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டால், அவர்களைத் தூக்கிக் கொண்டு போய் உயரமான மலையின் மேல் வைத்து விட்டு வந்து விடுவார்கள்! எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ள அம்முதியோர்கள் பசி, தாகத்தினால் தனிமையில் வாடி வதங்கி மடிவார்கள்.

இப்படியான சூழ்நிலையில், ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயைச் சுமந்து கொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியில் மலை உச்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். தாய் மகன் இருவருமே எதுவும் பேசவில்லை.

ஆனால், சிறிது நேரத்தில் தன் தோளில் இருந்த தாயார் ஏதோ ஒருவித மணம் கொண்ட மரங்களின் சின்னச்சின்ன கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டே வருவதை மகன் அறிந்தான்.

உடனே.. "அம்மா.. ஏதோ ஒரு மாதிரியான மரத்தின் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக்கொண்டே வருகிறீர்களே.. ஏன்?" என்று கேட்டான்.

அதற்கு தாயார், "மகனே.. நீ என்னை மலை மீது விட்டு விட்டு வீடு திரும்பும்போது வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா? இங்கே போடப்பட்டுள்ள கிளைகளை கவனித்து நடந்தால் வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய் சேரலாம். அதற்காகவே கிளைகளை அடையாளமாகப் போடுகிறேன்" என்றாள்.

வயதாகி விட்ட தன்னை தவிக்க விட்டுச்சென்றாலும் மகன் பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டும் என்று நினைக்கும் பாசமிகுந்த இந்தத் தாயா பயனற்றவர் என்று உள் மனம் கேட்க, அவன் தன் தாயை மீண்டும் தன் வீட்டுக்கே அழைத்து வந்து பாசத்துடன் கவனிக்கலானான்.

*****

# தாய்மையின் சிறப்பு

இரவு 12 மணிக்கு சாலையில் ஓர் வாடகை கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அந்த காரை கையசைத்து நிறுத்தினார்.

'தம்பி ஆஸ்பத்திரி போகணும்'.

'நான் வர முடியாது. சாப்பிட்டுட்டு படுக்கப் போறேன்'.

'என் மகளுக்கு பிரசவ வலி வந்து விட்டது. தயவு செய்து வர மாட்டேன்னு சொல்லிடாதேப்பா' என்றார் அப்பெண்மணி.

'நீங்க இவ்வளவு சொல்றதாலே வர்றேன், 500 ரூபா ஆகும்' என்றான் அந்த கார் ஓட்டும் இளைஞன்.

அப்பெண்மணி 500 ரூபாய் என்ன 1000 ரூபாய் கேட்டால் கூட தர சம்மதம் என்பது போல் வேகவேகமாக தலையாட்டி சம்மதிக்க, கார் அவர்களுடன் மருத்துவமனைக்கு விரைந்தது.

கார் ரெயில்வே கேட்டை நெருங்கவும், எச்சரிக்கை மணி ஒலிக்க கேட் மூடப்பட்டது. அந்த கர்ப்பிணியின் முனகல் சற்று நேரத்தில் அலறலாக மாறியது. இரண்டு ரெயில் வண்டிகள் எதிர் எதிர் திசையில் கடக்க பத்து நிமிடத்தில் கேட் திறந்தது.

இப்போது கார் இன்னும் சற்று வேகமாக ஓடி மருத்துவமனையில் நின்றது. நடுநசியின் நிசப்தத்தைக் கிழித்தது அப்பிரசவத் தாயின் அலறல். மூடிய விழிகளில் நீர் மல்க அந்த நடுத்தர வயதுப் பெண்மணி கைகளைக் கூப்பி மகளுக்காக இறைவனிடம் வேண்டினாள்.

சற்று நேரத்தில் மருத்துவர் வந்து சுகப்பிரசவம் நடந்துள்ளது. ஆண் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவித்தார்.

அந்த தாய், கார் இளைஞனிடம் 'தம்பி! ரொம்ப நன்றிப்பா.. இந்தா நீ கேட்ட பணம்' பணத்தை நீட்டினார். 'வேணாம்மா.. எங்கம்மா என்னைப் பெற எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாங்கன்னு இறைவன் எனக்கு புரிய வச்சிட்டார். பணத்தை நீங்களே வெச்சிக்கோங்க' என்று சொன்னபடி நடக்க ஆரம்பித்தான்.

பின்னர் ஏதோ யோசித்து, போனை எடுத்து ஒரு நம்பரை கண்டுபிடித்து டயல் பண்ணினான்.

'ஹலோ முதியோர் இல்லமா?'

'ஆமா. என்ன இந்த நேரத்துல போன் பண்ணுறீங்க?'

'மன்னிக்கவும். நாலு நாளைக்கு முன்னாடி அனாதைன்னு சொல்லி ஒருத்தங்களை உங்க இல்லத்துல சேர்த்தேன் இல்லையா?

அவுங்க அனாதை இல்லை, என்னை பெத்த தாய். நாளைக்கு காலையிலே வர்றேன் அவுங்கள கூட்டிட்டு போக' என்று கூறி முதியோர் இல்ல பொறுப்பாளரின் அனுமதியைக் கூட கேட்காமல் போனை கட் பண்ணி வி;ட்டு வண்டியை தீர்க்கமான முடிவோடு ஸ்டார்ட் செய்தான்.

ஆம். நிஜத்தை தரிசிக்கும் ஒவ்வொரு இதயமும், ஒரு மனிதனைப் பிரசவிக்கிறது.

★ ★ ★

# அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ?

பச்சிளம் குழந்தையாய் நீ அழுதபோதெல்லாம்
பால் நினைந்து உனை ஊட்டுவித்தாள்.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் நீ
வளர்ந்தபோது பெருமகிழ்ச்சி அடைந்திட்டாள்.

பிஞ்சு கால்களால் முதலில் நீ நடந்தபோது
நெஞ்சம் பூரித்துத் துள்ளிக் குதித்திட்டாள்.

உன்முதல் பிறந்தநாளன்று அவள் ஊட்டிய இனிப்பு
ஆஹா! என்ன சுவை! என்ன சுவை!

நீ முதன் முதலாகப் பள்ளிக்கூடம் சென்றபோது
அவள் உனக்குக் கொடுத்த இனிப்பு நினைவிருக்குமே!

தனக்கென புடவை வாங்கிக் கொள்ளாமல்
உனக்காகப் புத்தாடை வாங்கிக் கொடுத்தாள்.

நீ கம்பீரமாக ஓட்டிய சைக்கிள்
அவள் சேமிப்பில் வாங்கியதுதானே!

முதல்நாள் அலுவலகம் நீ சென்றபோது
நாவிற்கினிய சிற்றுண்டி செய்து கொடுத்தாள்.

வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள் வாசலில்-
நீ நல்லபடியாகத் திரும்பி வரவேண்டும் என்பதற்காகத்தானே?

உனக்கு காய்ச்சல் வந்தபோதெல்லாம், கண்ணயராது
உன்னை கவனித்தாள்: நீ நலம் பெற பிரார்த்தித்தாள்.

எத்தனை தியாகங்கள்? எத்தனை வேதனைகள்! அத்தனையும் தாங்கி
இன்னமும் காத்திருக்கிறாள்-உன் அன்புக்காக.

எங்கிருந்தாலும் அன்னையிடம் அன்பு காட்டு.
அரவணைத்துப் பாசம் காட்டு.

**அன்னையைப்** போல் ஒரு தெய்வமுண்டா?
அவளிடம் அன்பு காட்டாத மனிதருண்டோ?

# தாய்

மல்லாக்க படுக்கக் கூடாதென்று
ஒரு பக்கமாகப் படுத்து
அதுவும் முடியாமல்
மறு பக்கம் படுத்து
தூக்கம் தொலைத்து
ஒவ்வொரு நாளையும்
ஒரு யுகமாகக் கழித்து
ஒவ்வொரு அடியும்
ஒவ்வொரு நொடியும்
பட்ட சித்ரவதைகளும்,
வலிகளும், சோகங்களும்
பத்து மாதம் கழித்து
பெரு வலியைத் தாங்கி
நமக்கு உயிரும் உருவமும்
தந்த தருணத்தில்...
குழந்தை பிறந்த
மகிழ்ச்சியைக் கண்டு
மயங்காமல் மிளிர்கிறாள்..
சமுகத்திற்கு உயிரூட்டும்
ஒவ்வொரு பெண்ணும்
"அம்மா" என்ற அரியணையில்.

★ ★ ★

# அம்மா.. நீ சும்மாதானே இருக்கே..

எல்லோரும் கூறுகின்ற இந்த வார்த்தையை இப்பொழுது குழந்தைகள் கூட சொல்ல ஆரம்பிச்சுட்டாங்க. நீ சும்மாதானம்மா இருக்க, இதை செஞ்சி குடுத்திடும்மா.

எல்லாரும் சொல்றது போல ஒரு நாள் சும்மா இருந்தா என்னன்னு தோனுச்சு. வீட்டில் உள்ள அனைவரும் கிளம்பிட்டாங்க. அவரவர்க்கு தேவையான உணவுகளை சமைத்து கொடுத்து விட்டேன். இன்றைக்கு சும்மா இருப்போம், என்னதான் ஆகும் பாப்போம் என சும்மா இருந்தேன். மாலை கணவரும், பசங்களும் வீட்டிற்கு திரும்பினார்கள். அம்மா பசிக்குது மா.. ஏதாவது எடுத்துட்டு வாம்மா.. என்று மகனும் எனக்கு தலை வலிக்குது ஒரு காபி போட்டு தா.. என்று கணவரும் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. வாசல் முழுவதும் குப்பையால் நிறைந்து இருக்கிறது. வீட்டின் உள்ளே சென்றால் காலையில் செல்லும் பொழுது இரைத்த பொருட்கள் எல்லாம் அனைத்தும் கீழே இருக்கின்றன. காலையில் துடைத்த ஈரமான துண்டுகள் அனைத்தும் நாற்காலியில் இருக்கிறது. ஷூ பாலீஷ் செய்யும் டப்பா திறந்தே இருக்கு. தலைக்கு தடவும் ஜெல்லும் ஓபன் பன்னி இருக்கு. பசங்களுக்கும் ஒன்றும் புரிய வில்லை. அவர்கள் புத்தகங்கள் ஆங்காங்கே இருக்கிறது. விளையாட்டு பொருட்கள் இரைந்து கிடக்கின்றன. சீருடைகள் துவைக்காமல் அப்படியே போடப்பட்ட இடத்தில் இருக்கின்றது. அம்மா எங்கதான் போனாங்கன்னு சமையல் அறைக்குள் சென்று பார்த்தால் பாத்திரங்கள் கழுவாமல் நாற்றம் அடித்துக் கொண்டு இருக்கிறது. “எங்கதான் போனாளோ.. உடம்பு சரி இல்லையோ? என்று சொல்லிக்கொண்டே அம்மா அறைக்கு சென்றார் அப்பா. இரவு உபயோகப்படுத்திய தலையணை, போர்வை எல்லாம் மடித்து வைக்காமல் இரைந்து கிடக்கின்றன. சரி, குளியல் அறையில் இருப்பாள் கதவு தட்டி பாக்கலாம்னு திறந்தா.. காலையில் போட்ட சோப்பு டப்பா முழுவதும் தண்ணீரில் மூழ்கி கரைந்து போய் தரை முழுவதும் கொழ கொழன்னு ஆகிடுச்சு. அழுக்குத் துணிகள் அசிங்கமாய் தொங்கிக் கொண்டு இருந்தன. ஒன்றும் புரியாமல் பதற்றத்துடன் மாடியில் உள்ள அறைக்குள் சென்றார்கள். கையில் ஒரு புத்தகத்துடன் நாற்காலியில் அமர்ந்து அம்மா தேநீர் அருந்தி கொண்டு இருந்தாள். என்னடி ஆச்சு உனக்கு? வீடு ஏன் இப்படி இருக்கு? என்று கணவரும், அம்மா.. என்ன ஆச்சும்மா உனக்கு? என்று மகனும் ஒரே நேரத்தில் கேட்டனர்.

நீங்க எல்லோரும்தான் சொல்லிட்டு போனீங்க, வீட்ல சும்மாதான் இருக்கேன்னு. அதான் சும்மா இருக்கலாம்னு..!!

கணவனுக்கு தன் தவறு உணர்ந்தது. இந்த வார்த்தையை சொல்வது தவறு. நீ எதுவும் செய்யவில்லை என்றால் வீடு வீடாகவே இருக்காது என்னை மன்னித்து விடு என்று கூறினார். பிள்ளைகளும் தன் தவற்றை உணர்ந்து அம்மா மன்னிச்சிடும்மா.. இனி அப்படி சொல்ல மாட்டோம். நீ இல்லைன்னா வீடு எப்படி இருக்கும்னு தெரிஞ்சுகிட்டோம்.

நான் சொல்வதால் தான் என் பசங்களும் இந்த வார்த்தையை அவகிட்ட சொல்லி கஷ்டப்படுத்தறாங்கன்னு அவருக்கு புரிந்தது. இனி எப்போதும் தன் மனைவியை பிள்ளைகளிடமோ.. வெளி ஆட்களிடமோ தாழ்த்தி பேச மாட்டேன் என்று மனதிற்குள் ஒரு முடிவு எடுத்தார். நீ இங்கேயே இரு.. நான் போய் உனக்கு காபி போட்டு எடுத்துட்டு வரேன்னு கணவர் கிளம்பினார். பசங்களும் நாங்க உனக்கு ஸ்நாக்ஸ் எடுத்துட்டு வரோம்மா.. நீங்க வெயிட் பண்ணுங்கம்மா.. என்றனர்

யாரும் எதுவும் செய்ய வேண்டாம். எல்லோரும் போய் ஹாலில் உட்காருங்க! நான் பத்து நிமிடத்தில் உங்களுக்கு கேசரி செய்து தரேன் சாப்பிடுங்க என்ற அம்மா, மனதில் சந்தோஷத்துடன் சமையல் அறைக்குச் சென்றாள்.

இதுதான் அம்மாவின் குணம்.... அம்மா.. அம்மாதான்..!

*******

# இரண்டு தேவதைகள்

ஒரு குழந்தை பிறக்கத் தயாராகிக் கொண்டிருந்தது. அதற்கு முன் அது கடவுளைக் கேட்டது:

குழந்தை : இறைவா! நீ என்னை பூமிக்கு அனுப்பப் போவதாகச் சொல்கிறார்கள். நான் இவ்வளவு சிறியவனாகவும், உதவியற்றவனாகவும் இருக்கிறேன். நான் அங்கு எப்படி வாழப் போகிறேன்?

கடவுள் : பல தேவதைகளில் உனக்கென்று இரண்டு தேவதைகளை தேர்ந்தெடுத்து இருக்கின்றேன். அவர்கள் உனக்காகக் காத்திருப்பார்கள். உன்னை நன்கு கவனித்துக் கொள்வார்கள்.

குழந்தை : ஆனால், இங்கே சொர்க்கத்தில் நான் பாடுவதையும், சிரிப்பதையும் தவிர வேறெதுவும் செய்வதில்லை. நான் மகிழ்ச்சியாக இருக்க எனக்கு அதுதான் வேண்டும்.

கடவுள் : உனது தேவதைகள் தினந்தோறும் உனக்காகப் பாடுவார்கள். அவர்களது அன்பை உன்னால் உணரமுடியும். நீ மகிழ்ச்சியாக இருப்பாய்.

குழந்தை : எனக்கு மனிதர்கள் பேசும் மொழி தெரியாது. அவர்கள் பேசுவதை எப்படி புரிந்து கொள்ள முடியும்.?

கடவுள் : அது மிகவும் சுலபம். உனது தேவதைகள் நீ கேட்டறியாத இனிய வார்த்தைகளைச் சொல்லித் தருவார்கள். மிகவும் பொறுமையுடனும், அக்கறையுடனும் உனக்கு பேசுவது எப்படி எனக் கற்றுத்தருவார்கள்.

குழந்தை : ( கடவுளை ஏறிட்டுப்பார்த்து ஆவலுடன் கேட்டது ). நான் உன்னுடன் பேச விரும்பினால் என்ன செய்வது?

கடவுள் : ( புன்னகைத்துக் கொண்டே கூறினார் ). உனது இரண்டு கரங்களை சேர்த்து வைத்து எப்படி பிரார்த்தனை செய்வது என்று கற்றுத் தருவார்கள்.

குழந்தை : (மிகவும் வருத்தத்துடன் கூறியது).ஆனால் நான் இனிமேல் உன்னைக் காண முடியாது. ஆகையால் எப்போதும் வருத்தமாகவே இருப்பேன்.

கடவுள் : (குழந்தையை அணைத்துக் கொண்டு கூறினார்).நான் எப்போதும் உன்னுடன் இருப்பேன். உனது தேவதைகள் என்னைப் பற்றிப் பேசுவார்கள். பின்னர் என்னைக் காணும் வழியையும் உனக்குக் கற்றுத் தருவார்கள். ( அந்த விநாடியில், சொர்க்கத்தில் மிகுந்த அமைதி நிலவியது. ஆனால் பூமியிலிருந்து குரல்கள் மிக நெருக்கத்தில் கேட்டன).

குழந்தை : (மிக அவசர அவசரமாக கேட்டது).ஓ இறைவா! நான் இந்த இடத்தைவிட்டு நீங்கப் போகிறேன் என்றால் எனது தேவதைகளின் பெயர்களைச் சொல்லுங்கள்.

கடவுள் : உனது தேவதைகளின் பெயர்கள் முக்கியமல்ல, ஆனால் நீ அவர்களை அம்மா, அப்பா என்று கூப்பிடுவாய்.

# Who is a father?

A father is someone who
wants to catch you before you fall
but instead picks you up,
brushes you off,
and lets you try again.

A father is someone who
wants to keep you from making mistakes
but instead lets you find your own way,
even though his heart breaks in silence
when you get hurt.

A father is someone who
holds you when you cry,
scolds you when you break the rules,
shines with pride when you succeed,
and has faith in you even when you fail.

# அன்பு உள்ள இடத்தில் தான் நம்பிக்கை இருக்கும்

ஒரு தந்தையும் மகளும் ஆற்றின் பாலத்தை கடக்க முயல்கின்றனர்.

தந்தை சொன்னார் : "என் கையை கெட்டியாகப்பிடித்துக் கொள். ஆற்றில் தண்ணீர் நிறையப்போகிறது, பத்திரம்" என்று.

உடனே மகள் சொன்னாள். "அப்படியென்றால் நீங்கள் என் கையை பிடித்துக்கொள்ளுங்கள் அப்பா".

தந்தை கேட்டார் : "இரண்டுக்கும் என்னம்மா வித்தியாசம்?"

மகள் சொன்னாள் : "நான் உங்கள் கையை பிடித்தால், ஏதேனும் தவறு நடந்தால் கையை விட்டுப் பிரிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், நீங்கள் பிடித்தால் எந்த காரணத்திற்காகவும் என் கையை விட மாட்டீர்கள் அப்பா".

உண்மையான அன்பு எங்கே உள்ளதோ, அளவு கடந்த நம்பிக்கையும் அங்கே.. .

★ ★ ★

பிள்ளைகளின் ஆசையை
நிறைவேற்றுவது ஒருபுறம்
இருந்தாலும்–தான் அனுபவித்த
கஷ்டங்களை தனது பிள்ளைகள்
ஒருபோதும் அனுபவிக்க கூடாது
என்று நினைப்பது தான்
அப்பாக்களின் இதயம்

தோளில் உயர வைத்து
தான் பார்த்ததை விட அதிகம்
உலகை பார்க்கவைப்பவரே
அப்பா!!

**என்னை எவ்வளவு தூரம் வீசினாலும் பயமில்லை, ஏனென்றால் கீழே நிற்பவர் என் “அப்பா”.**



# அப்பா

1. அப்பாவின் தோள் மீது ஏறி
சுவாமி பார்க்கும் பால்யத்தில்
தெரிந்ததே
இல்லை... சுவாமியின் தோள்
மேல்தான்
இருக்கிறேன் என்று..!

★ ★ ★

2. அப்பாகிட்டே காசு
இல்லம்மா எனும்
சொல் கேட்டு
அழகாகத்
தலையாட்டும் மகளின்
புரிதல் தந்தைக்கு
சோகமயமானது.

★ ★ ★

3. குழந்தையை
பத்து மாதங்கள்
கருவறையில்
சுமந்தவள்
தாய் என்றால்...
தாயையும் சேர்த்து
குழந்தையை
தன் நெஞ்சிலே
சுமந்தவர்
"அப்பா"

★ ★ ★

4. புது பேனா வாங்கியவுடன்
அதை எனக்கு தந்துவிடுவார்
அப்பா, பழையதை தானே
வைத்துக்கொண்டு.

இப்ப புது மொபைல்
வாங்கியவுடன் பழையதை
அப்பாவுக்குத் தருகிறேன் நான்.

★ ★ ★

# அப்பா என்னை மன்னிப்பீர்களா

ஒவ்வொரு அமாவாசையன்று திதி
கொடுக்கும் போதெல்லாம் மனம்
கூசுகின்றது. வெட்கத்தால் தலை
குனிகிறேன். காரணம் தங்களின்
முதுமைக் காலத்தில் என்னுடைய
கடமையை மிகவும் சரியாகச் செய்ய
வில்லையோ என்ற குற்ற உணர்ச்சி தான்.

தங்களுக்கு வசதி செய்து
கொடுத்தேன். ஆஸ்பத்திரி
செலவுகளை ஏற்றேன். நோய்களுக்குப்
பணம் செலவழிக்கத்
தயங்கவில்லை. ஆனால் சற்றே
கூடுதல் கனிவுடன் செய்திருக்கலாமோ
என்று மனம் குறுகுறுக்கின்றது.
இப்போது ஆதங்கமாக உள்ளதே !

தாங்கள் ஆசைப்பட்டவைகளை
கடமையென வாங்கிக் கொடுத்தேன்.
சற்றே கூடுதல் மகிழ்ச்சியுடன்
செய்திருக்கலாமோ என இப்போது
மனம் நினைக்கிறதே!

இறுதி நாட்களில் உங்களின் பழைய
நண்பர்களைக் காணவேண்டும்,பேச
வேண்டும் என எண்ணி என்னை
அவர்களுக்குக் கடிதம் எழுதச்
சொன்னீர்கள்." உங்களுக்கு வேறு
வேலையே இல்லையா, அமைதியாக
இருங்கள்" எனச்சொல்லி, தங்களது ஆசையை
அலட்சியப் படுத்தினேன். தங்கள் மனம்
என்ன பாடுபட்டிருக்கும்? எவ்வளவு கேவலமாக
என்னை நினைத்திருப்பீர்கள்? அதை
எண்ணி இப்போது வெட்கப்படுகிறேனே !

ஒவ்வொரு தடவையும் தபால்காரார் வரும்போது
"எனக்கு ஏதாவது லெட்டர் வந்திருக்கின்றதா என்று
பார்" என்று கேட்ட போதெல்லாம், "இந்த வயதில்
உங்களுக்கு யார் கடிதம் எழுதப் போகிறார்கள்"
என்று நகையாடினேன், உங்களுடைய
உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் அப்படி
ஏளனமாகக் கூறியது எவ்வளவு மடமையென்று
இப்போது நினைத்துப் பார்க்கின்றேனே ,
வேதனையோடு!

உங்கள் பழைய காலத்து நிகழ்ச்சிகளை அவ்வப்போது
நினைவு கூறும்போது, "உங்களுக்கு வேறு வேலையே
இல்லையா, பழைய புராணங்களைக் கூறி எங்களை
போரடிப்பதைத் தவிர" என்று கூறி உதாசீனப் படுத்தியதை
நினைத்துப் பார்த்து என் தவறை இப்போது உணர்கிறேனே!

சாப்பிடும்போது கீழே சிந்தியதைப் பார்த்து "என்ன சிறு
குழந்தைபோல சோற்றை இறைக்கின்றீர்களே" என
நகையாடினேனே! வயதானவர்களையும் சிறுகுழந்தை போல்
பேணவேண்டும் என ஏன் அன்றைக்கு எனக்குத்
தோன்றவில்லை! மன முதிர்ச்சி இல்லாத காரணத்திலா அல்லது
அலட்சியமா! சற்றே நாவடக்கத்துடன் நடந்து கொண்டிருக்கலாமோ,
மனம் இப்போது வருத்தப்படுகின்றதே!

தாங்கள் சாப்பிட்ட தட்டையும்,
டம்ளரையும் இடதுகையால் தூக்கி
வைத்த அநாகரித்தை நினைத்துப் பார்த்தால்
எனக்கே அவமானமாக இருக்கின்றது, நானா
இப்படிச் செய்தேன் என. இப்போது வருத்தப் படுகிறேனே!

முதுகு அரிக்கின்றது, சொரிந்து விடப்பா
என்றீர்கள். சொரிந்து விட்டு கை அழுக்காகி
விட்டது என்று ஒவ்வொரு தடவையும் கையை சோப்பு
போட்டு கழுவியதை இன்று நினைத்தால்
என்மேல் எனக்கே இப்போது கோபம் வருகிறதே!

Contd....

# பெற்றோர்களை கவனித்தல் மகன் கடமையா அல்லது மகள் கடமையா?

## ஒரு மகளின் கேள்வி:

எனக்கு வயது 40, எனக்கு 2 குழந்தைகள். ஒரு ஆண், ஒரு பெண் இருவரும் படிக்கிறார்கள். சமீபத்தில் என் கணவர் இறந்துவிட்டார். இப்பொழுது அம்மா வீட்டில் இருக்கிறேன். அம்மா, அப்பா இருவரும் வயதானவர்கள். இருவரும் படுக்கையிலே இருக்கிறார்கள். எல்லா வேலையையும் நான்தான் செய்யணும். எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறார். ஆனால் அவரோ, அவர் மனைவியோ இவர்களை கவனித்துக்கொள்வதில்லை. என்னாலும் இவர்களை கவனித்துக்கொள்ள முடியவில்லை. தாய் தந்தையை கவனித்துக்கொள்வது மகன் கடமையா, மகள் கடமையா? எனக்கு சுமாராக எழுதப் படிக்க தெரியும். ஏதாவது வேலை செய்து பிழைத்துக்கொள்ளலாம் என்று பார்த்தால் இவர்களை யார் கவனிப்பது? பிள்ளைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும் என்பது என் ஆசை. எனக்கு நல்ல தீர்வை கூறுங்கள்.

## பதில்:

நாம் பிறந்ததும், இந்தக் குழந்தையை வளர்க்க வேண்டியது தாயின் கடமையா, தந்தையின் கடமையா என எந்த தாயோ, தந்தையோ சண்டையிடுவதில்லை. மாறாக இருவரும் ஒன்று சேர்ந்து கொஞ்சிக்குலவி தங்கள் மார்பிலும், தோளிலும் போட்டு குழந்தைகளை வளர்க்கிறார்கள். காலை உணவு நீ கொடு, மாலை உணவு நான் கொடுக்கிறேன் என்று பகிர்ந்துக் கொள்வதில்லை. தாலாட்டி, சீராட்டி, பள்ளிக்கு அனுப்பி கல்லூரி என எதிலும் குறையின்றி நடத்துகிறார்கள். தங்கள் தகுதிக்கு மீறி கஷ்டப்பட்டு திருமணம் செய்து வைக்கிறார்கள். அதன் பின்னரே அந்த பெற்றவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், அனாதைகளாகிறார்கள்.

மகளே! பெற்றவர்களை கவனித்து கொள்வது மகன் கடமையா, உங்கள் கடமையா என்று நீங்கள் கேட்கிறீர்களே...பெற்ற உங்களையும், உங்கள் அண்ணனையும் வளர்க்க வேண்டியது தாயின் கடமையா, தந்தையின் கடமையா என அவர்கள் கேட்டார்களா என்ன? உங்கள் இருவரையும் கூறுபோட்டார்களா என்ன?உங்கள் அண்ணனும் நீங்களும் மட்டும் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? உங்களுக்கும் மகன், மகள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் நீங்கள் பெற்றவர்களை ஏலம் விடுவதை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? நாளைக்கு உங்களுக்கு வயதாகும் போது பெற்றவர்களுக்கு நீங்கள் செய்ததை அவர்கள் உங்களுக்கு செய்வார்கள் என்பதை ஏன் மறந்து போகிறீர்கள்? படுக்கையில் கிடக்கும் பெற்றவர்களை கவனிப்பது சிரமம்தான். அதைவிட சிரமம் குழந்தைகளான உங்களை அவர்கள் வளர்த்தது. தாய் தந்தையான பின்னரே தாயின் அருமையும், தந்தையின் அருமையும் தெரியும் என்பார்கள். அப்படியும் தெரியாதவர்களை என்ன செய்ய?

மகளே! மனது வலிக்கிறது. நாளுக்கு நாள் வளர்ந்துவரும் முதியோர் இல்லங்கள் மிரட்டுகின்றன. நமக்கு வயதாகிக் கொண்டே போகிறது எனும் போது நாளை நமக்கு என்ன என்பதே மிரட்சியாக உள்ளது. முதியோர் இல்லங்களில் சேரப் பணம் வேண்டும். பெற்ற பிள்ளைகளின் நல் வாழ்விற்காக தங்கள் வாழ்நாள் மட்டுமின்றி, உழைத்து சம்பாதித்த அனைத்தையும் தொலைத்து விட்ட பெற்றவர்களை நினைத்து நெஞ்சம் குமுறுகிறது. அவர்களை நினைத்தால் பெரும் கவலையாக உள்ளது.

# தன் மகனுக்கு வயதான அப்பாவின் ஒரு கடிதம்

**அன்பு மகனே !**

இன்று என்னை முதியவனாகப் பார்க்கும் உன்னை அன்போடு வேண்டுகிறேன். அன்பு கூர்ந்து என்னைப் புரிந்துகொள்!

சற்றே அழுக்கான ஆடை உடுத்தினாலோ அல்லது சாப்பிடும்போது பருக்கைகள் கீழே சிந்தினாலோ அருவருப்பு அடைகின்றாயே, தூய்மையைப்பற்றி சிறுவயதில் உனக்கு சொல்லிக் கொடுத்ததே நான்தானே!

எந்த ஒரு விஷயத்தையும் ஆயிரம் தடவை சொல்லி வெறுப்பேற்றுவதாகக் கூறுகின்றாயே. ஒரே கதையை எத்தனைமுறை சொல்லி உன்னை அன்று தூங்க வைத்திருப்பேன் என்பதை சற்றே ஞாபகப்படுத்திப்பாரேன்!

உடல் தளர்ந்து களைப்பினால் ஒருநாள் குளிக்காவிட்டால் கூட கோபிக்கின்றாயே இன்று. விடாமல் உன்னைத் துரத்தி வந்து அழுக்குபோக குளிக்க வைத்தேனே அன்று ! யோசித்துப் பார்க்க மாட்டாயா?

வளர்ந்துவரும் தொழில்நுட்பம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லைதான். புரிந்துகொள்ள சற்றே அவகாசம் கேட்டால் அநாவசியமாக சினம் வருவது நியாயமா ?

எனது கால்கள் தள்ளாடும் போது சற்றே கைப்பிடித்து அழைத்துச்செல்லேன். அன்று உன்னை நான் கைப்பிடித்து நடை பழக்கியதைப் போல !

உன்னிடம் உரையாடிக் கொண்டிருக்கும் தருணங்களில் ஞாபகமறதியால் சிலசமயம் குழம்பிப்போவது உண்மைதான். அதற்காக எடுத்தெறிந்து பேசவேண்டாமே! அளவளாவும் செய்திகள் எனக்கு முக்கியமல்ல ! எனது அருகாமையில் நீ சற்றுநேரம் இருக்க வேண்டும் என்பதே முக்கியம் என்று நீ உணர வேண்டாமா மகனே !

முடியாத நிலையில் நான் சற்றே தளர்ந்து உள்ளேன். என்னிடம் அலுத்துக்கொள்ளாதே அடிக்கடி. ஆத்திரப்படாதே அவசியமில்லாமல். உதவிசெய். அன்றுநான் உனக்கு எனது கடமையை தவறாமல் செய்யவில்லையா? - சொல்லிக் காண்பிக்கின்றேன் என்று தயவு செய்து நினைக்காதே.

"கடவுளே! போதும் இந்த வாழ்க்கை. உன்னிடம் அழைத்துக் கொள் சீக்கிரமே என்னை," இப்படி எப்போதாவது நான் கூறினால் கோபப்படாதே, என்னைப் புரிந்துகொள். என்றாவது நீயும் அப்படிச் சொல்லக்கூடும் பின்னாளில்.

**தவமாய் தவமிருந்து** பெற்ற உன்னை ஆளாக்கிட நான் எவ்வளவு பாடுபட்டிருப்பேன். இதுவரை கைமாறு ஏதாவது கேட்டிருப்பேனா ? இப்போது கேட்கிறேன் மகனே !

*என் உடலும், உள்ளமும் சோர்ந்த நிலையில் என்னிடம் அன்பாக இரு ! அனுசரணையாக நடந்து கொள்! அதுபோதும் எனக்கு !*

***உன்னிடம் எப்போதும் அன்பு மாறாத***

**"அப்பா"**

# தந்தையும்.. மகளும்..

மகள் தான் புதியதாக வாங்கிய ஸ்மார்ட்போனை தனது தந்தையிடம் காட்ட வருகிறாள்.

தந்தை : இந்த போன் எவ்வளவு மா..?

மகள் : 40,000 ரூபாய் அப்பா..!

தந்தை : இந்த கவர் மற்றும் ஸ்கராட்ச் கார்டு என்ன விலை?

மகள் : 4 ஆயிரம்தான் அப்பா..

தந்தை: என்னது நாலாயிரமா..?

மகள் : ஆமாம்பா..! ரூ.40 ஆயிரத்துக்கு போன் வாங்கியிருக்கோம். அது பாதுகாப்பாக இருக்க ரூ.4 ஆயிரம் செலவு பண்றதுல என்ன இருக்கு? இதெல்லாம் ஒரு பிரச்சனையா?

தந்தை : ஏம்மா.. ரூ.40 ஆயிரத்துக்கு போன் வாங்கியிருக்க. அது பத்திரமா இருக்க அதை தயாரிச்சவங்க எந்த பாதுகாப்பும் செய்யாமலேயா வித்தாங்க?

மகள் : என்னப்பா? அவங்க போன் தயாரித்து தான் கொடுப்பாங்க. அதை நாமதான் பத்திரமா வச்சிக்கணும். அது மட்டும் இல்லை. பாருங்க! இந்த கவர் போட்டதும், போன் இன்னும் எவ்ளோ அழகா இருக்கு? இந்த ஸ்கராட்ச் கார்டு போன்ல கீரல் விழாம பாதுகாக்கும்.

தந்தை: அப்படியா? ஏம்மா நீ இந்த போனை விட எவ்வளவு அழகா இருக்க? இந்த போனை பாதுகாக்கிறியே.. உன்னை ஏம்மா பாதுகாத்துக்க மாட்டேன் என்கிறாய்? நான் உன் உடலை மறைச்சு ஆடை அணிய சொல்லிக்கிட்டே இருக்கேன். நீ காது கொடுத்து கேட்கவே மாட்டேன் என்கிறாய்.

இந்த போனை விட நீ மதிப்பு இல்லாதவளா? இது உனக்கு தெரியலையா? நீ முழுமையாக ஆடை அணிந்தால் இன்னும் எவ்வளவு அழகா இருப்ப? அது தீய பார்வைகள் உன்னை தீண்டாமல் பாதுகாக்கும் இல்லையா? யாரோ ஒருவர் தயாரிப்புக்கே நீ இவ்வளவு பாதுகாப்பு தர நினைக்கும்போது, இறைவன் படைத்த என் மகளான உன்னை நான் பாதுகாக்க வேண்டாமா? இந்த ஸ்மார்ட் போனை விட நீதான் என் பொக்கிஷம். மகள் வெட்கி தலைகுனிந்தாள்.

இந்தத் தந்தையின் அறிவுரை அவரது மகள் போன்ற அனைவருக்கும் தேவை.

*******

# சுதந்திரமாக இருக்க விரும்பிய மகள் !

தன் மகளை சில விஷயங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்வதால், மகள் அவள் அப்பாவிடம் கேட்டாள்: ஏம்பா.. என்னை இப்படி கண்டிப்புடன் நடத்துகிறீர்கள்? என்னை கொஞ்சம் சுதந்திரமாக விடலாமே.. என்று.

ஆனால், அதை அப்பா சற்று கஷ்டமாகவே உணர்ந்தார்.. இதை எப்படி இவளுக்கு சொல்லிக் கொடுப்பது என யோசித்தார்.

ஒரு நாள் மகள் வந்து கேட்டாள். அப்பா! நான் பட்டம் விட்டு விளையாடப் போகிறேன், நீங்களும் வாங்க.. என்று அழைத்துக் கொண்டு வீட்டின் மொட்டை மாடிக்கு சென்றாள்.

பட்டத்தை நூலில் கட்டி பறக்க விட்டு மகிழ்ந்தாள். அப்படி மகிழ்ந்திருக்கும் வேளையில் அப்பா கேட்டார், பட்டம் மேலே பறக்க அழகாய் இருக்கிறது. ஆனால், அதன் விருப்பம் போல் பறக்க முடியவில்லை. அதற்கு தடையாய் இருப்பது என்னம்மா..?

மகள் பட்டென பதில் சொன்னாள், இந்த நூல்தான் அப்பா.. அதை தன் இஷ்டத்திற்கு விடாமல் கட்டி வைத்திருக்கிறது.

அப்படியா.. எனக் கேட்டுவிட்டு அந்த நூலை அப்படியே அறுத்து விட்டார் அப்பா. பட்டமும் தன் இஷ்டப்படி பறந்தது. ஆனால், சற்று நேரத்திலேயே கிழிந்த காகிதமாய் கீழே விழுந்தது.

அப்பா சொன்னார் .. மகளே..! இந்த பட்டத்தை தன் இஷ்டப்படி பறக்க விடாமல் தடுக்க வில்லை... சரியான வழியில் இந்த பட்டம் பறந்து உயரங்களை கீழடக்க இந்த நூல் உதவியாய் இருக்கிறது. இதே போலத்தான் மகளே.. உன் அப்பாவாகிய நானும் ஒரு நூல்தான். நீதான் அந்தப் பட்டம்... நீ என்னுடைய பேச்சைக் கேட்டு அதன்படி நடப்பாயெனில் என் பாதுகாவலுடன் சுதந்திரமாக உயர பறக்கலாம். உன் இஷ்டப்படி மட்டுமே வாழ நினைத்தால் அந்த பட்டம் கிழிந்து காகிதம் ஆனது போல் உன் வாழ்க்கையும் ஆகி விடலாம். இப்போது புரிந்திருப்பாய் ஏன் உன்னை கண்டிக்கின்றேன் என்பதனை, நூலாகிய என்னை அறுத்து விடாதே என்று சொல்லும்போதே, மகள் தன் அப்பாவை கட்டி அணைத்துக் கொண்டாள்..!!

ஆம்.. அன்பான பிள்ளைகளே.. உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம். ஆனால், அவற்றின் முடிவு பயங்கரமானதாக இருக்கக்கூடும்.

அம்மாவின் அன்பும், அப்பாவின் கண்டிப்பும் இருந்தால்தான் குழந்தைகளின் வாழ்வு சரியான வழியில் இனிமையாக அமையும், என்பதை மறக்காதீர்கள்.

*******

# அப்பா இன்று இல்லையே!

அப்பா காலமாகி 15 வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனால் இன்றுதான் முதல் முறையாக அவரைப்பற்றி எழுதுகிறேன். அவர் முக்கிய பிரமுகர் என்று நினைக்கவில்லையா அல்லது அவரைப் பற்றி எழுதுவதற்கு பெரிதாக ஏதுமில்லை என்ற எண்ணமா என்றெல்லாம் கேட்டால் எனக்குத் தெரியவில்லை.

அப்பாவின் மன உறுதியும், திடமும் உன்னதமானவை. வாழ்க்கையின் கஷ்டமான காலகட்டங்களில் சவால்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றவர். எளிமையான வாழ்க்கை, நேர்மை தவறாத போக்கு, தியாக உணர்வு ஆகியவற்றை பின்பற்றியவர்.

அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லையோ என்ற குற்றவுணர்வு அடிக்கடி நெருடிக்கொண்டே இருக்கிறது. பெரிய குடும்பத்தில் பிறந்து ஏழ்மையில் வளர்ந்த அப்பா இளமையில் பட்ட கஷ்டங்களையும், அனுபவங்களையும் சற்றே கேட்டிருக்கலாமோ!

அப்பா அவ்வப்போது சொல்லும் ஆங்கிலப் பாடல்களையும், அலுவலகத்தில் அவருக்கு கிடைத்த அனுபவங்களையும், சோதனைகளையும் முழுமையாக கேட்காமல் இருந்து விட்டோமோ என்ற வருத்தம் இன்றும் எனக்கு உண்டு.

என்னுடன் பிறந்த ஐந்து சகோதரர்களையும் கல்லூரியில் படிக்க வைத்தார். சுமாரான குடும்பத்தை சேர்ந்த நாங்கள் அனைவரும் இன்று நல்ல நிலையில் இருக்கின்றோம்.

"இந்த மனிதர் பிள்ளைகளின் படிப்புக்காக இப்படியா செலவு செய்வார்" என்று அம்மா சொல்லிச்சொல்லி மாய்ந்துபோவார். தன்னுடைய சம்பளம் வெறும் 1000 ரூபாயாக இருந்த போது மாதாமாதம் ரூ. 100 செலுத்தி என் தமக்கையை நர்சரி பள்ளயில் சேர்த்தாராம்.

தன் வாழ்நாள் முழுவதும் சிக்கனத்தை அப்பா கடைபிடித்தார். நான் பள்ளியில் படிக்கும் போது, அண்ணனின் புத்தகங்களை சீரமைத்து அட்டை போட்டுத்தருவார். எழுதாத பேப்பர்களை சேகரித்து ரஃப் நோட்டு தைத்துக் கொடுப்பார். நாங்கள் பயன்படுத்தாமல் இருக்கும் சட்டை பேண்ட்களை மகிழ்ச்சியோடு அணிந்து கொள்வார்.

படிப்பு விஷயத்தில் எங்களுக்காக எப்படி தாராளமாக செலவு செய்தாரோ அதேபோல் சாப்பாடு விஷயத்திலும் செலவு செய்தார் . சீசனுக்கு ஏற்றாற்போல் மாம்பழம், சீத்தாபழம் என்று வாங்கித்தருவார். பப்பாளி பழத்தை நேர்த்தியாக நறுக்கி, ஐஸ் சேர்த்து ஐஸ்கிரீம் தயாரித்துத் தருவார். நினைத்தாலே இன்றும் இனிக்கிறது. தனக்காக அவர் ஒன்றுமே செய்து கொண்டதில்லை.

அப்பா, இன்று நீங்கள் இல்லை. நாங்கள் நல்ல நிலையில் இருக்கின்றோம். உங்களை நன்றியோடு நினைத்துப்பார்க்கிறோம்.

எங்களுக்காக நீங்கள் பட்ட கஷ்டங்களை எண்ணிப்பார்க்கிறோம். எங்கள் தவறுகளை பொறுத்தருளுங்கள்.

உங்களை போல் தங்கள் பிள்ளைகளை உருவாக்கி வருகின்ற அப்பாக்கள் பலர் இருப்பினும், உங்களைப்போல் எங்களுக்கு யார் இருக்க முடியும்? இப்போது தான் உணர்கின்றோம் உங்கள் பெருமையை, வாய்விட்டு அழவேண்டும் போல் இருக்கின்றது.

# அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது

வசதியாகத்தான் இருக்கிறது
மகனே...
நீ என்னைக் கொண்டு வந்து
சேர்த்த
முதியோர் இல்லம்.

பொறுப்பாய் என்னை
ஒப்படைத்துவிட்டுச்
சலனமின்றி நீ
வெளியேறிய போது,
முன்பு நானும் இதுபோல்
உன்னை வகுப்பில்
விட்டு விட்டு

என் முதுகுக்குப் பின்னால்
நீ கதறக் கதறக்
கண்ணீரை மறைத்தபடி
புறப்பட்ட காட்சி
ஞாபகத்தில் எழுகின்றது.

முதல் தரமிக்க
இந்த இல்லத்தை
தேடித் திரிந்து
நீ தேர்ந்தெடுத்ததை
அறிகையில்

அன்று உனக்காக நானும்
பொருத்தமான பள்ளி
எதுவென்று...
ஓடி அலைந்ததை
ஒப்பீடு செய்கிறேன்.

இதுவரையில்
ஒரு முறையேனும்
என்  முகம் பார்க்க
நீ வராமல் போனாலும்,
என் பராமரிப்பிற்கான
மாதத் தொகையை
மறக்காமல் அனுப்பி
வைப்பதற்காக
மகிழ்கின்றேன்.

நீ விடுதியில் தங்கிப்
படித்த காலத்தில்
உன்னைப் பார்க்க
ஆவல் இருந்தாலும்

படிப்பை நினைத்து
உன்னைச் சந்திக்க மறுத்ததின்
எதிர்வினையே
இதுவென்று
இப்போது அறிகின்றேன்.

இளம் வயதினில்
நீ சிறுகச் சிறுகச்
சேமித்த அனுபவத்தை
என் முதுமையில்
மொத்தமாக எனக்கே
செலவு செய்கிறாய்.

ஆயினும்
உனக்கும் எனக்கும்
ஒரு சிறு வேறுபாடு

நான் கற்றுக்கொடுத்தேன்
உனக்கு...
வாழ்க்கை இதுதானென்று!
நீ கற்றுக்கொடுக்கிறாய்
எனக்கு...
உறவுகள் இதுதானென்று..!!

# இது அப்பாவை நேசிப்பவர்களுக்கானது!

அப்பாவிற்கு அழத்தெரியாது!!

குடும்பத்திற்காக மாடாய் உழைத்த போதும், பிள்ளைகளின் பசியாற்ற ஓடாய் தேய்ந்த போதும், என்னடா வாழ்க்கை இது என ஒரு நாளும் அழுதிருக்க மாட்டார்..!

மனைவியை நெஞ்சில் சுமந்து, பிள்ளைகளைத்தோளில் சுமந்து குடும்பப்பொறுப்புகளை தலையில் சுமந்து, போகும் வழி தெரியாமல் விழிபிதுங்கி நின்ற போதும்! தான் கலங்கினால் குடும்பம் உடைந்துவிடும் எனக்கல்லாய் நின்றவர்!

அம்மாவிடம் ஒட்டிக்கொள்வோம்! அப்பாவிடம் எட்டி நிற்போம்! முகம் கொடுத்து பேசிய வார்த்தைகள் சொற்பம் என்போம்! ஆனால், தோல்வியில் துவளும்போது பிடித்துக்கொள்ள அப்பாவின் கைகளைத்தான் முதலில் தேடுவோம்!

நாம் திண்ணும் சோறும்! உடுத்தும் உடையும்! படித்த படிப்பும்! அப்பாவின் வியர்வையில் தான் என ஒரு நாளும் அவர் சொல்லிக்காட்டியதில்லை! நேரில் நம்மிடம் நாலு வார்த்தை கூட பேசாதவர், ஊர் முழுக்க நம்மை பற்றித்தான் பெருமையாக பேசித் திரிவார்! அம்மாவின் பாசத்தை அங்கலாய்க்கும் நாம், அப்பாவின் பாசத்தை உணரக்கூட இல்லையோ!

நமக்கு மீசை முளைத்தால் அவர் குதூகலிப்பார்!

தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால் அவரே உயரமானதாக உணர்வார்! வாழ்க்கையில் நம்மை முன்னே நடக்க விட்டு பின்னே நின்று பெருமிதத்துடன் ரசிப்பார்!

நம் வாழ்க்கையின் பின்னால், அப்பா எப்போதுமே இருப்பார்!

அப்பாவிற்கு பாசத்தை வெளிப்படுத்த தெரியாது!

அப்பாவிற்கு கொஞ்சத்தெரியாது. அப்பாவிற்கு போலியாய் இருக்கத் தெரியாது! அப்பாவிற்கு தன் கஷ்டத்தை வெளிக்காட்ட தெரியாது! அப்பாவிற்கு தனக்காக எதையும் சேர்த்து வைத்துக் கொள்ள தெரியாது!

வளர்த்த கடா மார்பில் பாய்ந்த போதும், ஒரு வேளை சோற்றுக்காக மருமகளுக்கு வேலைக்காரனாய் மாறிப்போன போதும், முதியோர் இல்லத்திற்கு தூக்கி வீசப்பட்ட போதும், அவர் அழுதவரில்லை! நம் சந்தோஷத்திற்காகவே எதையும் தாங்கும் ஆன்மா அவர்!

பாசமோ! மன்னிப்போ! அழுகையோ! உணர்வுகளை அவரிடம் உடனே வெளிப்படுத்தி விடுங்கள்! ஒரு வேளை உங்கள் நண்பனின் அப்பா மரணமோ! உங்கள் அப்பா வயதுடைய யாரோ ஒருவரின் மரணமோ! உங்களை புரட்டி போட்டு அவர் பாசம் புரிந்து! அப்பாவைத் தேடி ஓடி வரும்போது வீட்டில் அப்பா.. சிரித்துக்கொண்டிருக்கலாம் புகைப்படத்தில்!!

பாவம் அவருக்கத்தான் அழத்தெரியாதே!!

******

# அப்பாவுக்கு மகள் எழுதும் மனம் கவர்ந்த கவிதை!

நான் முதன்முதலாக நேசித்தவன் நீ..
எப்பொழுது நேசிக்கத்தொடங்கினேன்
என்ற கேள்வியை மட்டும்
கேட்காதே அப்பா..

அம்மாவின் அடி வயிற்றில்
கை வைத்து என்னுடன்
பேசினாயே!!
அப்பொழுதே நிகழ்ந்திருக்கக்கூடும்..
இல்லையேல்.. கொடி கூட
அவிழாத நிலையில் உன்
கையில் ஏந்தி உச்சி
நுகர்ந்து முத்தம் பதித்தாயே!!
அப்பொழுதே நிகழந்திருக்கக்கூடும்.

ஆயிரமாயிரம் கதைகளை சொல்லி
அன்னை உறங்க வைத்த
போதிலும் உன் மார்பில்
தூங்கிய சுகம் வருமா?? !!

கண் எரியாமல் நீராட
செய்வதும் ஒரு கலையாகும்.
அதில் தாயை விட நீ
தேர்வு பெற்றதாலோ என்னவோ..??
உன்னை மட்டுமே தேடி அழுதேன்
குளிக்கும் வேளையில்.

நடைபழகும் வேலையை
விடுத்து என் பாதங்கள்
தரையில் ஊன்றியதாய்
நினைவில்லை
உன் தோள் மீது
அமர்ந்து என் கொலுசோடு
உரசிய உன் சட்டைப்
பொத்தான்கள் மட்டுமே ஞாபகம்..

சின்ன சின்ன மணிகளை
வைத்துத் தைத்த பாவாடை
சட்டை அணிந்த பொழுது
“தேவதையே எனக்கு மகளாகப்
பிறந்து விட்டாள்!!“ என்று
கொண்டாடினாயே

மிரட்டலாக என்னை வகுப்பறையில்
அமர்த்தி விட்டு கலக்கத்துடன்
வெளியேறும் உன்னை நானறியாமல்
யார் அறிவார்..??

தாவணியின் நுனியினை பிசைந்த
வண்ணம் உன் முன் நாணி நான்
நிற்க.. உன்னை விட்டு
விலகிச் செல்ல வெகு நாட்கள்
இல்லை என்று நினைத்தாய் போலும்!!
கண்களில் துளிர்த்த நீரை
யாவருக்கும் தெரியாமல்
துடைத்துக்கொண்டாய்

நான் சமைத்த உணவை நா கூசாமல்
புகழ்ந்து தள்ளுவாயே..!! உன்
பொய்க்கும் ஒரு காதல்
உண்டு அப்பா..

என் விழி அசைவினில் என்
தேவைகளை பூர்த்தி செய்யும்
உன்னை தெய்வத்திற்கு ஈடாக பார்க்க
முடியுமா என்று கேட்டால் இல்லை
என்று
தான் சொல்வேன் பக்தி இருந்தால்
ஒழிய கிடைக்கும் தெய்வத்தின் வரம்

என் ஒரே ஒரு கவலை என்னை
புகுந்த வீட்டிற்கு அனுப்பி வைத்து
விட்டு கண்ணீர் விடும் உன்னைத்
தேற்ற என்னை அன்றி எவருக்குத்
தெரியும் என்பதே??!!

என் கணவனை எந்நாளும்
உன்னுடன் ஒப்பிட மாட்டேன்..
எனக்கு நன்றாகவே தெரியும்
என்னை முழுதாக நேசிக்கும்
ஒரே ஒரு ஆடவன் நீ மட்டும்தான் என்று..

இனி ஒரு ஜென்மம் வேண்டும் என்று
எண்ணியதில்லை.. ஆனால்
அவ்வாறு நிகழ்ந்தால் மறுபடி
உன் மகளாக பிறக்கும்
வரம் மட்டும் போதுமப்பா..!

*****

# அப்பா இன்று இல்லையே !

எப்படி எப்படி எல்லாமோ தன் பாசம் உணர்த்துவாள் அம்மா ஒரேயொரு கை அழுத்தத்தில் எல்லாமே உணர்த்துவார் அப்பா...

முன்னால் சொன்னதில்லை, பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன் என்னைப் பற்றி பெருமையாக அப்பா பேசிக்கொண்டிருந்ததை.

அம்மா எத்தனை முறை திட்டினாலும் உறைத்ததில்லை, உடனே உறைத்திருக்கிறது என்றேனும் அப்பா முகம் வாடும் போது

உன் அப்பா எவ்வளவு உற்சாகமாக இருக்கிறார் தெரியுமா என என் நண்பர்கள் என்னிடமே சொல்லும் போதுதான் எனக்குத் தெரிந்தது எத்தனை பேருக்குக் கிடைக்காத தந்தை எனக்கு மட்டும் என...

கேட்ட உடனே கொடுப்பதற்கு முடியாததால் தான் அப்பாவை அனுப்பி இருக்கிறாரோ கடவுள்..?

சிறுவயதில் என் கைப்பிடித்து நடைபயில சொல்லிக்கொடுத்த அப்பா, என் கரம்பிடித்து நடந்த போது என்ன நினைத்திருப்பார்..?

லேசாக என் கால் தடுமாறினாலும் பதறும் அப்பா, இன்று நான் தடுமாறிய போது பதறாமல் இருக்கிறாரே மீளா துயிலில்...

அம்மா செல்லமா? அப்பா செல்லமா? என கேட்டபோதெல்லாம் பெருமையாகச் சொல்லி இருக்கிறேன்அம்மா செல்லமான அப்பா செல்லம் என. இன்று அப்பாசென்ற பின்னர் நான் யார் செல்லம்..?

எத்தனையோ பேர் “நான் இருக்கிறேன்” எனச் சொன்னாலும் அப்பாவை போல் யார் இருக்க முடியும்..?

சொல்லிக்கொடுத்ததில்லை,திட்டியதும் இல்லை,இல்லை என்றும் சொன்னதுமில்லை,வேண்டாம் எனக் கூறியதும்இல்லை,இருந்தும் ஏதோ ஒன்றினால் கட்டுப்படுத்தியது அப்பாவின் அன்பு.

நானும் காட்டியதில்லை அவரும் காட்டியதில்லை எங்கள் பாசத்தை...இருந்தும் காட்டிக் கொடுத்த கண்ணீரைத் துடைக்க இன்று அப்பா இல்லையே !

அம்மாவிடம் உன்னுடைய பாசத்தையும் அப்பாவிடம் நேசத்தையும் இன்றே உணர்த்துங்கள். நாளை என்பது வராமலும் போகலாம்...

★ ★ ★

# DEAR DAD

I Seldom take the time to tell you
All the things I feel.
I want to tell you that my love
For you is very real.
I'll long appreciate your many
Kind and thoughtful deeds
You've always been so sensitive
Responding to my needs

I feel that you are special
Let me thank you from my heart
For all your treasured wisdom
And the warmth that you impart

I always will respect you for
The ways inwhich you care.
It's reassuring knowing that
Your love is always there.

★ ★ ★

# நிழலும் நிஜமும்

நிழற்படத்துக்கு வலிக்காமல்
சுத்தமாய் துடைத்து
பொட்டிட்டு
பூ வைத்து
அலங்கார விளக்குகளை
அழகழகாய் எரிய விட்டு
அவருக்குப் பிடித்த
அனைத்துப் பண்டங்களையும்
அடுக்கடுக்காய் பரப்பி
தீப தூபம் காட்டி
அவரது ஆன்மாவை
சாந்தியடையச் செய்வதாய்
நினைத்து
வழிபட்டான்  தந்தையை,
உயிரோடிருக்கும் போது
ஒருவேளை சோறு போட
யோசித்த அன்பு மகன்.

# தவமாய் தவமிருந்து

தவமிருந்து
என்னைப் பெற்றதையும்
கைப் பிடித்து
பள்ளிக்கு அழைத்துச் சென்றதையும்
தேர்த் திருவிழாவில்
கேட்டவற்றை வாங்கித் தந்ததையும்
பால்யம் மாறினாலும்
சிநேகிதனாய் அரவணைத்ததையும்
இலக்கியம் முதல்
விளையாட்டு,காதல் வரை
வரம்பு மீறாமல் பேசி மகிழ்ந்ததையும்
நினைத்து நினைத்து அழ
ஏராளமிருந்தும்
பாழாய் போன நாகரிகம் கருதி
பொங்கி வரும் அழுகையை
விசும்பல்களுக்கிடையே
அடக்கினேன்
அப்பாவின் சடலம் பார்த்தபடி...

# இல்லற வாழ்க்கை மிகச்சிறப்பாக அமைய மூன்று பண்புகள் தேவை...

## விட்டுக் கொடுப்பது
## அனுசரித்துப் போவது
## பொறுத்துப் போவது

விட்டுக்கொடுப்பது என்றால் யார் விட்டுக்கொடுப்பது?

கணவனா? மனைவியா?

யாரிடம் அன்பு அதிகமாக இருக்கிறதோ, யார் மிக அறிவாளியோ அவர்கள்தான் முதலில் விட்டுக்கொடுப்பார்கள்.

அன்புள்ளவர்களிடம் பிடிவாதம் இருக்காது.. பெருந்தன்மை இருக்கும்.

அவர்கள்தாம் குடும்பத்தில் ஆற்றலை உண்டு பண்ணுகிறவர்கள்.

அவர்கள்தாம் இறை ஆற்றலோடு நெருக்கம் உள்ளவர்கள்.

அவர்கள் தொட்டதெல்லாம் கைகூடும்.

அவர்களுக்குத்தான் தவம் எளிதாகக் கைகூடும்.

அனைத்து சிக்கல்களுக்கும் அவர்களே தீர்வாக திகழ்வார்கள்.

அருட்பேராற்றல் பெற்றவர்கள் அவர்களே..!

******

# நூலை அறுப்பது கடினமே...

கணவன் - மனைவி, கல்யாணமான புதிதில் மகிழ்ச்சியாக இருந்தனர். காலப்போக்கில் கருத்து வேறுபாடு வந்தது. அது வளர்ந்தது... முற்றியது... கடைசியில் நீதிமன்றத்தை நாடினார்கள். விவாகரத்து வேண்டினர். உற்றார் உறவினர்கள் எல்லாம் கவலைப்பட்டார்கள்.

“கடவுளே.. இவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடு” என்று வேண்டினார்கள்.

ஒரு நாள், பெரியவர் ஒருவர் அவர்கள் வீட்டுக்கு வந்தார். இவர்கள் விஷயத்தைக் கேள்விப்பட்டு, கணவனையும் மனைவியையும் அருகில் அழைத்தார்.

“இப்போது நமக்குள் ஒரு போட்டி, அதில் நீங்கள் ஜெயித்து விட்டால், நானே முன்னின்று உங்களுக்கு விவாகரத்து வாங்கித்தருகிறேன். நான் ஜெயித்து விட்டால், நான் சொல்கிறபடி நீங்கள் கேட்க வேண்டும்!” என்று சொன்னார்.

“சரி... என்ன போட்டி? அதைச் சொல்லுங்கள்!”

“முதலில் ஒரு மெல்லிய நூல் கொண்டு வாருங்கள். போட்டி என்ன என்பதை பிறகு சொல்கிறேன்..!”

கொண்டு வந்தார்கள். சுமார் இரண்டு அடி நீளமுள்ள மெல்லிய நூல் அது. பெரியவர் அதை வாங்கிக்கொண்டார்.

“இதோ பாருங்கள்... இப்போது இந்த நூலின் ஒரு முனையை நீங்கள் பிடித்துக்கொள்ளுங்கள். இன்னொரு முனையை நான் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் இருவரும் சேர்ந்து இழுத்து, இந்த நூலை அறுத்து விட வேண்டும். அவ்வளவுதான்!”.

“இது ஒரு பெரிய காரியமா?” என்று சொல்லிக் கொண்டே இருவரும் அவர்களது பக்கம் இழுக்க ஆரம்பித்தார்கள்.

இந்தப்பக்கம் நின்ற பெரியரோ அவர்கள் இழுக்க இழுக்க, அவர்கள் பக்கம் நகர்ந்து போய்க்கொண்டே இருந்தார். அப்புறம் எப்படி நூல் அறுபடும்?

அவர்கள் சுற்றிச்சுற்றி வந்தார்கள். இவரும் கூடவே சுற்றிச்சுற்றி வந்தார். இறுதியாக அந்தக்கணவன் மனைவி தோல்வியை ஒப்புக்கொண்டார்கள்.

இப்போது பெரியவர் சொன்னார்...

“இவ்வளவுதான் வாழ்க்கை. விட்டுக்கொடுக்கத் தெரிந்தால், உறவு அறுந்து போகாது..!”

வாழ்க்கையின் மகத்துவத்தைக் கண நேரத்தில் புரிந்து கொண்ட கணவனும் மனைவியும் கண்கள் பனிக்க பெரியவரின் காலில் விழுந்தார்கள். விட்டுக்கொடுக்கத் தெரிந்தவர்களே வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்.

******

# மனித நேயம் இதுதானோ..!

கேரளாவில் நடந்த ஒரு சம்பவம் :

போகும் வழியில் ஒரு மின் கம்பத்தில் ஒரு சிறு துண்டு காகிதம் எழுதி தொங்கவிடப் பட்டிருந்தது. அப்படி என்னதான் அதில் எழுதியிருக்கு என்ற ஆர்வத்தில் நானும் போய் படித்ததேன். அதில் :

“என்னுடைய 50 ரூபாய் தொலைந்து விட்டது. யார் கையிலாவது கிடைத்தால் தயவு செய்து இந்த விலாசத்தில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். எனக்கு கண் பார்வை அவ்வளவு சரியில்லை” என்று விலாசத்துடன் எழுதியிருந்தது.

எனக்கும் பொழுது போகவில்லை. அந்த குறுக்கு வழியில் பார்த்த ஒரு நபரிடம் விலாசம் கூறி வழி கேட்டேன். “இந்த அம்மாவா.. கொஞ்சம் தூரம் போனால் ஒரு பழைய வீடு இருக்கும். அங்கதான் அந்த கண் தெரியாத அம்மா இருக்கு”.

அங்கே ஒரு சிறிய கீத்துக் கொட்டகை. ஒரு நாள் மழைக்கு கூட தாங்காது. வெளியில் கண்கள் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக வயதான ஓர் அம்மா என் காலடி சத்தம் கேட்டதும், 'யாருப்பா நீ?' என்று கேட்டார்.

'அம்மா.! நான் இந்த வழியாக வந்தேன். நான் 50 ரூபாய் கீழே கிடந்து எடுத்தேன். அதை உங்களிடம் தரலாம் என்று வந்தேன்.”

கேட்டதும் அந்த அம்மா அழ ஆரம்பித்து விட்டார். “தம்பி ரெண்டு நாளா கிட்டத்தட்ட முப்பது முப்பத்தஞ்சு பேர் வந்து 50 ரூபா கீழே விழுந்து கிடைச்சது என்று சொல்லி குடுத்துட்டு போறாங்க. அந்த கடிதம் நான் எழுத வில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது”.

“பரவாயில்லை அம்மா.. நீங்க வச்சிக்கோங்க” என்று சொல்லி கொடுத்து திரும்பினேன். “தம்பி.. நீ போகும்போது மின்கம்பத்தில் இருக்கும் அந்த கடிதத்தை மறக்காமல் கிழித்து போட்டு விடு” என்று அறிவுரைத்தாள் அந்த தாய்.

என் மனதில் விதவிதமான எண்ணங்கள். யார் அந்த கடிதத்தை எழுதி இருப்பார்கள். அந்த கடிதத்தை கிழித்து விடு என்று அந்த அம்மா ஒவ்வொருவரிடமும் கூறிக்கொண்டுத்தான் இருப்பார். ஆனால், யாரும் அப்படி செய்யவில்லை. யாரும் இல்லாமல் அனாதையாக வாழும் ஓர் உயிருக்கு கடித வடிவில் உதவி செய்த அந்த நண்பருக்கு மனத்தால் நன்றி சொல்லி கொண்டேன். நன்மை செய்ய வேண்டும் என்ற மனம் இருந்தால் அதற்கு ஆயிரம் வழி.

மனதில் யோசித்துக்கொண்டே வரும் போது வழியில் ஒருவர் என்னிடம், “அண்ணே இந்த விலாசம் எங்கே என்று சொல்ல முடியமா? கீழே 50 ரூபாய் கிடைத்தது. அந்த அம்மாகிட்டே குடுக்கணும். வழி சொல்றீங்களா?”

மனிதநேயம் சாகவில்லை..

*****

# கணவனின் மௌனம்...!

மாலை வேளையில் நடை பயிற்சியை முடித்துக்கொண்டு அந்த தம்பதியினர் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தனர். வரும் வழியில் ஒரு கயிற்றுப்பாலம் இருந்தது. சற்று இருட்டியதால் இருவரும் வேகமாக நடக்கத்தொடங்கினர். திடீரென மழைச்சாரலும் வீசியது. வேகமாக நடந்து கொண்டிருந்தவர்கள் ஓடத்தொடங்கினர். கணவர் வேகமாக ஓடினார். கயிற்றுப்பாலத்தை கணவன் கடந்து முடிக்கும்போதுதான் மனைவி பாலத்தை வந்தடைந்தாள் மழைச்சாரலோடு கும்மிருட்டும் சேர்ந்ததால் மனைவி பாலத்தைக் கடக்க பயப்பட்டாள். அதோடு மின்னலும் இடியும் சேர்ந்து கொள்ள பாலத்தின் ஒரு பக்கத்தில் நின்று கொண்டு கணவனைத் துணைக்கு அழைத்தாள். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

மின்னல் மின்னிய போது கணவன் பாலத்தின் மறு பக்கத்தில் நின்ற கொண்டிருப்பது தெரிந்தது. தன்னால் முடிந்த வரை கத்தி கணவனை அழைத்தாள். கணவன் திரும்பிப்பார்க்க வில்லை. அவளுக்கு அழுகையாய் வந்தது. இப்படி பயந்து அழைக்கிறேன், என்ன மனிதர் இவர், திரும்பிக்கூட பார்க்க வில்லையே என்று மிகவும் வருந்தினாள். மிகவும் பயந்து கொண்டே கண்களை மூடிக்கொண்டு, கடவுள் மீது பாரத்தைப் போட்டு மெல்ல மெல்ல பாலத்தைக் கடந்தாள். பாலத்தை கடக்கும்போது இப்படி ஒரு இக்கட்டான நிலையில் கூட உதவி செய்யாத கணவனை நினைத்து வருந்தினாள். ஒரு வழியாக பாலத்தைக் கடந்து விட்டாள்.

கணவனை மிகுந்த கோபத்துடன் பார்த்தாள்.

அங்கு கணவன் மழையில் ஒரு பக்கம் உடைந்துத் தொங்கிக்கொண்டிருந்த கயிற்றுப்பாலத்தை தூக்கிப் பிடித்துக்கொண்டிருந்தார்.

சில சமயம் கணவர் குடும்பத்திற்காக எதுவும் செய்யாமல் மௌனமாக இருப்பதாகத் தோன்றும். ஆனால், உண்மையிலேயே அவர் தன் குடும்பத்தைத் தாங்கிப் பிடித்துக்கொண்டுதான் இருப்பார். தூரத்தில் பார்க்கும் போது அன்பு இல்லாதவர் போல் இருந்தாலும் அருகில் சென்று பார்க்கும்போது தான் அவரின் அன்பு தெரிய வரும்.

*****

# அற்புதமான தம்பதியர்...

கேரளாவில் ஒதுக்குப்புறமாக ஒரு வீடு. வீட்டைச்சுற்றி தோப்பு. தொடர்ச்சியான பருவ மழையும் குளிர்ச்சியான கிளைமேட்டும் சேர்ந்து மரப்பட்டையில் பச்சையாக பாசம் படிந்த மரங்கள். பார்க்கின்ற எல்லா பக்கமும் பச்சை பசேல்னு ஒரே குளிர்ச்சியா இருக்கும். இந்த வீட்டில் ஒரு வயதான தம்பதிகள். அவர்களைத்தேடி யாரும் வருவதில்லை. பசங்க எல்லாம் வெளிநாட்டில் இருப்பாங்க போல. நாங்க புதுசா கல்யாணம் ஆன இளம் தம்பதி. அவர்கள் வீட்டுக்குப்பக்கத்து வீடு எங்களுடையது. வார நாட்களில் எங்க ரெண்டு பேருக்கும் வேலைக்கு போய்ட்டு வரவே சரியா இருக்கும். எப்படியோ எங்களுக்குள்ள பழக்கம் ஆகி, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் அவர்களுடைய நந்தவனத்தில்தான் எங்களுக்கு காபி.

காபி குடித்து விட்டு ஒரு மணி நேர சம்பாஷணைக்குப்பின்தான் வீடு. நல்லா ஓய்வாக இருக்கும். அந்த சில்லென்ற குளிரில் அவசரம் இல்லாமல் காபியை குடித்துவிட்டு அவர்களுடன் பேசிக்கொண்டு இருப்பதில் ஒரு தனி சுகம்.

ஒவ்வொரு முறை அவங்க வீட்டுக்கு போகும்போது, காபி டப்பா மூடியை திறக்க முடியாமல் அந்த பாட்டி, தாத்தாகிட்ட கொடுத்து திறக்க சொல்வாங்க. தாத்தாவும் மீசையை ஸ்டைலா முறுக்கி விட்டுகிட்டு ஒரு வெற்றி சிரிப்புடன் திறந்து கொடுப்பார். பாட்டி ஒரு நமட்டுச்சிரிப்புடன் அடுப்பங்கரைக்கு போயிடுவாங்க. இதனை பல தடவை பார்த்துட்டு, சென்ற முறை போயிருந்தப்ப, பாட்டிக்கு மூடியை ஈசியா திறக்கிற மாதிரி ஒரு கருவி வாங்கிக்கொடுத்தோம்.

இந்த வாரமும் வழக்கம்போல் எங்கள் ஞாயிறு மாலை visit. வழக்கம்போல் காபி டப்பாவுடன் தாத்தாவை அணுகினார் பாட்டி. தாத்தாவும் இறுமாப்புடன் திறந்து கொடுக்க, பாட்டி உள்ளே சென்றார். பாட்டி உள்ளே சென்றவுடன் என் மனைவியும் பின் சென்று, 'பாட்டி ஏன் அந்த கருவியை உபயோகித்து நீங்க டப்பாவை திறக்கல்ல.. மறந்துட்டீங்களான்னு' கேட்க, பாட்டி சிரித்துக்கொண்டே கூறினார். 'குழந்தை..இந்த மூடியை திறக்க எதுவும் தேவையில்லை. நானே திறந்திருப்பேன். அவரை நான் திறக்க சொல்றதானலே, அவருக்கு என்னை விட பலசாலின்னு ஒரு பெருமிதம்.. சந்தோஷம். இந்த வீட்டு ஆம்பிளைன்னு ஒரு கெத்து. இன்னும் நாம் இந்த வீட்டுக்கு உபயோகமா இருக்கோம் என்ற ஒரு மகிழ்ச்சி. நான் இன்னும் அவரை சார்ந்து இருக்கேன்னு அவருக்கு ஒரு ஆளுமை.

திருமண வாழ்க்கையின் அடிப்படையே ஒருமித்து வாழ்வதுதானே. **இன்னும் வாழப்போறது கொஞ்ச நாள்தான்.** யாரும் யாருக்கும் பயன் இல்லாமல் இருக்கோமென்ற நினைப்பு இல்லாமல் ஒருமித்து சந்தோஷமா வாழ வேண்டும். அதுக்குத்தான் இந்த நாடகம்'னு சொன்னாங்க. கொஞ்ச நேரம் என்னால் எதுவும் பேச முடியவில்லை. இந்த மூடியில இவ்வளவு விஷயமா?

வயசானவங்களை தாழ்வாக எண்ணக்கூடாது. அவங்க செயல்களிலும் அர்த்தம் இருக்கு. தன்னால் யாருக்கும் பிரயோஜனம் இல்லைனு ஒரு நினைப்பு யாருக்கும் வரக்கூடாதுன்னு எவ்வளவு அழகா சொல்றாங்க... செய்யறாங்க...

*****

# எப்போது பறிகொடுத்தேன் மகனே

எதிர்படும் போது
ஹாய் டாட் என்கிறாய்
அலட்சியமாக.

உள்ளங்கை எலி
உருண்டு கொண்டே இருக்கிறது
உலக வலைகளில்.

காரும்,
சிலிர்கிற செல்போனுமாக
தாமிர வார்த்தைகளிலேயே
தவழ்ந்து கொண்டிருக்கிறாய்.

உன் பிள்ளைகள்
உன்னைப் பார்த்து
ஒரு வாரமிருக்குமா?

தாத்தாவின்
பழங்கதைகளை
எத்தனை முறைதான்
கேட்பார்கள்?

அன்பு மனைவியின்
பெயராவது ஞாபகமிருக்குமோ
என்னவோ!

மூன்று  வயதில்
அப்பா... அப்பா...
என்று என்னை அழைத்துக்
கொண்டு போய்
என் ப்ரண்ட்ஸ் பாருப்பா
என்று
குருவிகளைக் காட்டிய உன்னை
எப்போது பறிகொடுத்தேன்
என்றே தெரியவில்லை அன்பு மகனே...

# முதல் மரியாதைக்குரிய 'வெட்டியான்' – சின்னதம்பி

இந்த உலகில் பிறந்தவர்கள் அனைவரும் ஒருநாள் இறக்க வேண்டும். அதுதான் இயற்கையின் நியதி. ஆனால், இறந்த பின்பு நம்மை அடக்கம் செய்ய 4 பேர் வேண்டும். அவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். குடும்பம் குழந்தைகள் என்று ஆடம்பரமாக வாழ்ந்து முடித்தவர்கள் அமர்க்களமாக அடக்கம் செய்யப்படுவர். ஆனால், அனாதைகளுக்கு அந்த கொடுப்பினை கிடையாது.

திருச்சி உறையூர் பாண்டமங்கலத்தைச் சேர்ந்தவர் சின்னதம்பி (61). மிகச் சாதாரண கூலி தொழிலாளி. புதிதாக கட்டப்படும் வீடுகளில் மொசைக் அமைப்பை உருவாக்குவதுதான் இவரது தொழில். சிவப்பு கலர் வேட்டியும் அதே கலரில் சட்டையும் அணிந்து தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கியிருந்த இவர், ஒரு முறை திருச்சி அரசு ஆஸ்பத்திரி அருகே நடந்து சென்று கொண்டிருந்தார். அங்கு ஒரு மூதாட்டி ரோட்டின் ஓரத்தில் இறந்து கிடந்தார். அந்த வழியாக சென்றவர்கள் அதைப் பற்றி எந்த கவலையும் கொள்ளவில்லை. விரைவாக அந்த இடத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். ஆனால், சின்னதம்பிக்கு அது மனவேதனையை ஏற்படுத்தியது.

அந்த ஏரியா போலிஸ் ஸ்டேஷனுக்கு தகவல் தெரிவித்தார். அவர்களை வரவழைத்து முறைப்படி வழக்கு பதிவு செய்து அனாதை பிணம் என்பதை உறுதி செய்த பின்பு அவர்களின் உதவியோடு அந்த பிணத்தை தூக்கிச் சென்று தனது செலவில் அதை நல்லடக்கம் செய்தார். அன்று முதல் இன்று வரை 500க்கும் மேற்பட்ட பிணங்களை இவர்தான் அடக்கம் செய்துள்ளார்.

இவரது இரக்க குணத்திற்கு இன்னொரு உதாரணம், திருச்சி வண்ணாரப்பேட்டையில் திருமணமாகாத ஒரு இளம்பெண் கொடிய நோயால் இறக்கும் தருவாயில் இருந்தார். அவரது பெற்றோருக்கு தனது மகள் சுமங்கலியாக இறக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அந்த பெண்ணும் கழுத்தில் தாலியோடு சுமங்கலியாகத்தான் சாக வேண்டும் என்று விரும்பினாள்.

இதை கேள்விப்பட்ட சின்னதம்பிக்கு அப்போது 30 வயது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் அந்த பெண் ஆசைப்பட்டதை போன்று நிம்மதியாக இறக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவருக்கு தாலி கட்டி அவரை மனைவியாக ஏற்றுக்கொண்டு சந்தோஷமாக நித்திய சுமங்கலியாக அவர் உயிர் பிரியும் வரை உடனிருந்ததோடு, அவரின் பெற்றோருக்கும் மிகப்பெரிய ஆறுதலை அளித்தார்.

திருச்சி மாவட்டம் உறையூரில் சின்னதம்பியை தெரியாதவர்களே இல்லை என்று கூறலாம். அந்த அளவிற்கு தனது சேவையால் முதல் மரியாதையை பெற்றுள்ள இவர், சமீபத்தில் உடல் நலக்குறைவால் செய்து கொண்ட ஆபரேஷனால் நடமாட முடியாத நிலையில் உள்ளார். இருப்பினும் இவர் மீது கொண்ட அன்பின் காரணமாக, அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பலர், இவரது சேவையை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறனர்.

சின்னதம்பியை போன்று அடையாளம் தெரியாத பலர் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வலது கை செய்வது இடது கைக்கு தெரியக் கூடாது என்பதுதான் சேவை என்பது சின்னதம்பியை போன்றவர்களுக்கு மட்டும்தான் தெரியும். அவர்கள்தான் மக்கள் மனங்களில் என்றென்றும் நிலைத்து நிற்பர்.

******

# மனிதாபிமானம்!

<u>நிகழ்வு– 1:</u>

நண்பர் ஒருவர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் அதிகாலை நான்கு மணிக்கு ரயிலில் வந்து இறங்கினார். வடபழனி தாண்டிப் போக வேண்டும். ஆட்டோ பிடித்தார். நான்கரை மணிக்கெல்லாம் அவர் வீட்டு வாசலில் ஆட்டோ வந்துவிட்டது. ஆட்டோ கட்டணம் ரூ.230.
பர்ஸை எடுத்துப் பார்த்தார். என்ன சங்கடம்... ஐநூறு ரூபாய் நோட்டுத்தான் இருந்தது. சில்லறை இல்லை. ஆட்டோ ஓட்டுநரிடம் 500 ரூபாயைக் கொடுத்து மீதியைக்கேட்டார்.
நீங்கள்தான் முதல் சவாரி ஐயா.. என்னிடமும் சில்லறை இல்லையே..! என்றார். அதிகாலை 4½ மணிக்கு எந்தக் கடையும் திறந்திருக்காது. யாரிடம் போய்ச் சில்லறை வாங்குவது? யோசித்த நண்பர், பெருமூச்சுடன், சரி மீதி உன்னிடமே இருக்கட்டும் என்று சொல்லி விட்டார்.
ஆட்டோ ஓட்டுநர் அவரது செல்பேசி எண்ணைக் கேட்டு வாங்கிக் கொண்டார்.

காலை 10½ மணிஅளவில் அவருக்கு குறுஞ்செய்தி வந்தது. அனுப்பியது அந்த ஆட்டோ ஓட்டுநர் தான். அதில் வந்த செய்தி:

“உங்களுக்கு நான் தரவேண்டிய மீதித்தொகை ரூ.270/-க்கு உங்கள் செல்போனில் ரீசார்ஜ் செய்து விட்டேன்.. நன்றி!“

மிகுந்த வியப்படைந்த நண்பர், தன் செல்போனை எடுத்து தன் கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

*****

<u>நிகழ்வு-2:</u>

இரு சக்கர வாகனத்தில் வழக்கமான பாதையில் அலுவலகத்திலிருந்து வந்து கொண்டிருந்த நண்பருக்கு தன் மனைவி பூ வாங்கிவரச் சொன்னது திடீரென ஞாபகத்திற்கு வந்தது. சாலையோரத்தில் பூ விற்றுக்கொண்டிருக்கும் கிழவியைப் பார்த்தார். இரு சக்கர வாகனத்தை நிறுத்தி அந்த மூதாட்டியிடம் இரண்டு முழம் மல்லிகைப்பூ வாங்கினார். ஒரு முழம் 15 ரூபாய். அந்தப் பெண்மணிக்கு முப்பது ரூபாய் கொடுக்க வேண்டும். இவரிடம் சில்லறை இல்லை. நூறு ரூபாய் நோட்டை நீட்டினார். அந்த பாட்டியிடமும் எழுபது ரூபாய் திருப்பிக் கொடுப்பதற்கு சில்லறை இல்லை.

“நூறு ரூபாயை இன்றைக்கு வைத்துக்கொள்ளுங்கள் பாட்டி.. நாளை இதே வழியில்தான் வருவேன். அப்போது உங்களிடம் மீதி எழுபது ரூபாயை வாங்கிக் கொள்கிறேன்..” என்றார் நண்பர்.

“தம்பி..! நூறு ரூபாயை நீயே வைத்துக்கொள். நாளை இந்தப்பாதையில் வரும் போது முப்பது ரூபாயைத்தா.. நீ என்னை நம்புகிற மாதிரி நானும் உன்னை நம்புகிறேன். நான் வயசானவள்.. திடீரென ஏதோ நேர்ந்து நான் காலமாகிவிட்டால் நேரே கடவுளிடம் போய்ச் சேரவேண்டும். உன் எழுபது ரூபாயைத் திருப்பித் தருவதற்காக நான் மறு பிறவி எடுக்கக் கூடாது..!“
பூ விற்று பிழைக்கும் எளிய மூதாட்டியின் எண்ணப் போக்கு நண்பரை திகைப்பில் ஆழ்த்தியது.

*****



Teacher's Day : 5th , September

# GREAT TEACHERS

They don't just teach,
They are mentors
They are advisors
They are role models
They are guides and above all
They are shapers of great human beings.

★ ★ ★ ★

# ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும்?

1. விரும்பி இந்த வேலைக்கு வந்திருந்தாலும்,விரும்பாமல் வந்திருந்தாலும், வேலையை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

2. அர்ப்பணிப்பு உணர்வு மிகுந்திருக்க வேண்டும்.

3. சமுதாயப் பொறுப்பு மிகுந்திருக்க வேண்டும்.

4. தனது பாடம் மட்டுமின்றி, பல விஷயங்கள் குறித்தும் அறிந்திருக்க வேண்டும்.

5. பண்புகளை உடையவராகவும், மாணவர்களிடத்துப் பண்புகளை உருவாக்குபவராகவும் இருக்க வேண்டும்.

6. சிறந்த சிந்தனைகளோடு, தொலை நோக்குப்பார்வையுடன் மாணவர்களை உருவாக்குவதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

7. மாணவர்களின் திறனறிந்து, அவர்களை அவற்றிற்கேற்ப உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

8. தவறுகளைப் பொருட்படுத்தாது, மன்னித்து, மறந்து, தவறு செய்பவர்களையும் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும்.

9. எவரையும் கவரும் சக்தி (Inspire) உடையவராக இருக்க வேண்டும். முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

10. போட்டிகள்,அறைகூவல்கள் நிறைந்த வாழ்க்கை ஆற்றில் எதிர்நீச்சல் போடுவதற்குரிய, அளப்பரிய திறன்களைக் கற்பிப்பவராக இருக்க வேண்டும்.

11. பெறுவதைவிட அளிப்பதில் தான் பேரின்பம்.

க.துளசிதாசன்

★ ★ ★

# என் கனவு ஆசிரியர்

நல்லாசிரியர் புரியாத கணிதத்தை, பாடத்தைப் புரிய வைப்பவர் மட்டுமல்ல. ஒரு வகையில் வாழ்க்கையையும் புரிய வைப்பவர்.

கனவு ஆசிரியர் வானத்தில் இருந்து மழையாய்ப் பொழிபவர் அல்ல. நிலம் அறிந்து விதைப்பவர், தேவை அறிந்து உரம் போடுபவர், வேலி அமைத்துப் பாதுகாப்பவர். அறுவடை வரையில் அரவணைப்பவர்.

நல்லாசிரியர் நம்பிக்கை ஊட்டுபவர். உன்னால் முடியும் என்று உற்சாகப்படுத்துபவர். அவரே வானத்தையும் காட்டுகிறார், சிறகிற்கும் வலுவூட்டுகிறார். அவர், தடுக்கி விழுந்தால் தாங்கி நிறுத்துபவர். முதல் வரிசை மாணவருக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்காமல் திறனறிந்து தேவையுணர்ந்து உதவி வழிகாட்டுபவர்.

நல்லாசிரியர் உளவியல் உணர்ந்தவர். அவர் புலம்புவதில்லை, சபிப்பதில்லை, சினம் காட்டுவதில்லை.

நல்லாசிரியர் பயன் கருதிப் பணியாற்றுவதில்லை. அவர் மாணவர்களிடமிருந்து தனக்கென்று எதையும் எதிர்பார்ப்பதில்லை. தனது மாணவர்களின் மகத்தான வெற்றி அவருக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அந்த மகிழ்ச்சியே அவரது எதிர்பார்ப்பு. அவரை இயக்கும் உந்துவிசை.

நல்லாசிரியர் ஒரு சிற்பி. கல்லில் சிலைகளைக் கண்டுபிடிப்பவர். மூங்கிலைப் புல்லாங்குழலாக்குபவர்.

நல்லாசிரியர் அடுத்த தலைமுறையின் மனித வளத்திற்கு அடித்தளம் போடும் சமூக விஞ்ஞானி.

எந்தப் பஞ்சத்தையும் இந்த பாரத தேசம் தாங்கும். நல்ல ஆசிரியர்களுக்கான பஞ்சத்தைத் தவிர.

ஆர்.பாலகிருஷ்ணன்

★ ★ ★

# ஆஹா ஆசிரியர்

ஒரு நாள் மாலை பள்ளி விட்டு வந்ததும் என் மகன் அம்மா, நாளைக்கு உன்னை எங்க மிஸ் கூட்டிட்டு வரச் சொன்னாங்க என்றான். காரணம் கேட்டதற்கு தெரியலை என்று சொன்னான். என்னவாக இருக்கும் என்று அன்று இரவு முழுவதும் ஒரே குழப்பம். மறுநாள் காலையில் மகனை அனுப்பிவிட்டு, சிறிது நேரத்திற்குப் பிறகு, நானும் பள்ளிக்குச் சென்றேன். கனிவோடு வரவேற்ற அந்த மிஸ், உங்க பையன் நல்லா படிக்கிறான், கையெழுத்து அழகா வந்திடுச்சு, அதோட ஓவியப் போட்டியில் முதல் பரிசு வாங்கியிருக்கான் என்று கூறியதோடு, வகுப்பில் உள்ள மாணவர்களைப் பார்த்து, எல்லோரும் கைதட்டுங்க! என்று உற்சாகப்படுத்திய பிறகு, நீங்களும் இதே போல உங்க பெற்றோர்களை கௌரவப்படுத்தணும் புரிஞ்சதா? என்றார். உங்க வேலைகளுக்கு இடையே நான் கூப்பிட்டதும் வந்ததற்கு நன்றி என என்னிடம் சொன்னார். இன்ப அதிர்ச்சிக்கு உள்ளானேன் நான்.........................................

இப்படிப்பட்ட ஆசிரியர்களின் அணுகுமுறை அற்புதம் !

ராஜம், மதுரை

★ ★ ★

நம்மை விட
வளர்ந்து விட்டானே என்று
பொறாமைப் படாத
ஒரே ஜீவன்
நம் ஆசிரியர் மட்டும்தான்.

# இதுவும் மனிதநேயமே..!

சென்னையில் மாஞ்சா நூலைப் பயன்படுத்தி பட்டம் விடுவது சட்டப்படி தவறு. ஆனாலும், இப்படி பட்டம் விடுவதும், மாஞ்சா நூலில் சிக்கி டூ வீலர்களில் செல்லும் வாகன ஓட்டிகள் உயிர் இழப்பதும், மருத்துவமனையில் அட்மிட் ஆவதும் அவ்வப்போது நடந்து வருகிறது.

நடந்த சம்பவம். சென்னை சாலிகிராமம் தசரதபுரத்தில் இரண்டு மரங்களுக்கு நடுவே சிக்கிய பட்டத்தில் இருந்து அறுந்து தொங்கிய மாஞ்சா நூலில் சிக்கிய ஒரு காகம் நீண்ட நேரமாக உயிருக்கு போராடியது. கா.. கா.. கா.. எனக்கத்தி தவித்தது. ஆபத்தில் மாட்டிக்கொண்ட காக்கையின் குரல் கேட்டு ஸ்பாட்டுக்கு ஏகப்பட்ட காக்கைகள் அங்கே பறந்து வந்தன. பயத்தில் அவையும் கத்தின. இந்த சப்தத்தைக்கேட்டு, நடந்ததை அறிந்த அந்த பகுதி மக்கள் காகத்தை காப்பாற்ற முயன்றனர். அவர்களால் முடியவில்லை. கார்த்திகேயன் என்பவர் உடனடியாக தீயணைப்புத்துறைக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

உடனே கோயம்பேட்டில் இருந்து நிலைய அதிகாரி ராஜேந்திரன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் அங்கே விரைந்து வந்தனர். முதலில் பக்கத்தில் இருந்த டிரான்ஸ்பார்மரில் மின் இணைப்பைத் துண்டித்தனர். ஒருவர் டிரான்ஸ்பார்மர் மீதும் மற்றொருவர் மரத்தின் மீதும் ஏறி, மாஞ்சா நூலில் சிக்கித்தவித்த காகத்தை பிடித்து மாஞ்சா நூலை அவிழ்த்தனர். பின்னர், அந்த காகத்தை பத்திரமாக மீட்டு பறக்க விட்டுள்ளனர்.

ஒரு காகத்துக்காக தீயணைப்பு வீரர்கள் இவ்வளவு நேரம் போராடினீர்களா? என்று நிலைய அதிகாரி ராஜேந்திரனிடம் கேட்டால் 'உயிர்களை காப்பாற்ற வேண்டியது எங்கள் கடமை. காகமும் ஒரு உயிர்தான். காலை 9.15க்கு போன் வந்ததும் அடுத்த நிமிடமே கிளம்பி விட்டோம். ஒரு காகத்துக்காக 100 காகங்கள் கரைந்து கொண்டிருப்பதை பார்த்தோம். எங்களுக்குப் பரிதாபமாக இருந்தது. டிரான்ஸ்பார்மர் மின் இணைப்பைத் துண்டித்து காகத்தைக் காப்பாற்றினோம். இதை கவனித்துக் கொண்டிருந்த மற்ற காகங்கள் பணியில் இருந்த எங்களைக்கொத்தவில்லை. சிக்கித்தவித்த காகமும் எந்தவித அடமும் பிடிக்கவில்லை. அதை மீட்டவுடன் தண்ணீர் கொடுத்தோம். அதை குடித்தவுடன் சந்தோஷமாக பறந்தது.' இதுவும் ஒருவகை மனிதநேயமே..!.

# தாம்பத்தியம்

ஒரு முதியவர் தட்டுத்தடுமாறியபடி தெருவில் நடந்து கொண்டிருந்தார்.அப்போது ஒருவன் அவரைப் பார்த்து தன் வண்டியை நிறுத்தி, உதவி செய்யும் நோக்கத்தில் அருகில் சென்றுப் பார்த்தான். அவரது காலில் கட்டை விரல் நசுங்கி இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

“என்னங்க ஆச்சு?”னு கேட்டான்.

“வேகமா வந்த ஆட்டோ சக்கரம் காலில் ஏறிடிச்சி தம்பி..” என்றார்.

“வாங்க.. எனக்குத் தெரிந்த டாக்டர் பக்கத்திலதான் இருக்கார், கட்டுப்போட்டு முதல்ல இரத்தம் கசியறத நிறுத்தனும். கூடவே T.T. இன்ஜக்ஷனும் போட்டுக்கொள்ளலாம” என்றான்.

வேண்டாம் என்று மறுத்தவரை விடாப்பிடியாக அழைத்துச்சென்றான் அவன். எல்லாம் முடியவும்... “மணி என்ன தம்பி... நேரம் ஆயிடிச்சே.. நேரம் ஆயிடிச்சே...!” என்று பதறினார் பெரியவர்.

“அப்படி என்னங்க அவசரம்?” என்றான்.

“என் மனைவி பசியோட வீட்டில இருக்கா. அவளுக்கு இட்லி வாங்கிக்கிட்டு போகனும்...!”

“என்ன பெரியவரே.. உங்க கால்ல அடி பட்டிருக்கு... இப்ப இட்லியா முக்கியம்...?! லேட்டா போனாதான் என்ன?... திட்டுவாங்களா? !” என்று கேட்டான்.

அதற்கு அவர் “அவ 5 வருஷமா மனநிலை பாதிச்சி நினைவு இல்லாமல் இருக்கா தம்பி. எல்லா ஞாபகமும் போயிடுச்சி! நான் யார்னு கூட அவளுக்குத்தெரியாது...!” என்றார்.

அதற்கு அவன் “அப்படிப்பட்டவங்க உங்களை ஏன் லேட்டுன்னு எப்படி கேப்பாங்க...? அவங்களுக்குத்தான் உங்களை யார் என்று தெரியாதே! கவலைப்படாதீங்க” என்றான்.

அதற்கு அந்த முதியவர் புன்னகைத்த படியே சொன்னார் “ஆனா.. அவ யாருன்னு எனக்குத்தெரியுமே தம்பி..!”

இதுதான் தாம்பத்தியம்...!

******

# லாபக்கணக்கா? அல்லது புண்ணியக்கணக்கா?

ஒரு ஊரில் உள்ள சின்ன ஹோட்டல் ஒன்றில், கையில் தூக்கு வாளியுடன் ஒரு 10 வயது சின்னக்குழந்தை 'அண்ணா..! அம்மா 10 இட்லி வாங்கி வரச்சொன்னாங்க... காசு நாளைக்குத் தருவாங்களாம்' என்றது.

ஹோட்டல் நடத்துபவர், 'ஏற்கனவே கணக்கில் நிறைய பாக்கி இருக்கு.. அம்மாகிட்டே சொல்லு..இப்போ வாங்கிட்டுப்போ.. தூக்கு வாளியை தா.. சாம்பார் ஊத்தி தரேன்..' என்றார்.

இட்லி பார்சலையும், சாம்பார் நிறைந்த தூக்கு வாளியையும் அந்தக்குழந்தையிடம் தருகிறார்.

குழந்தை, 'சரி.. அம்மாகிட்ட சொல்றேன்.. போயிட்டு வரேன் அண்ணே..!'

அந்தக்கடையில் வாடிக்கையாக சாப்பிடும் ஒருவர் கேட்டார். 'நிறைய பாக்கி இருந்தா ஏன் மறுபடியும் குடுக்கிறீங்க..?'

ஹோட்டல் முதலாளி சொன்னார்... 'அட.. சாப்பாடுதானே சார். நான் முதல் போட்டுதான் கடை நடத்துறேன். இருந்தாலும் இது மாதிரி குழந்தைகள் வந்து கேட்கும்போது மறுக்க மனசு வரல சார்... அதெல்லாம் குடுத்துடுவாங்க... என்ன கொஞ்சம் லேட் ஆகும். எல்லாருக்கும் பணம் சுலபமாவா சம்பாதிக்க முடியுது? குழந்தை பசியால் கேட்டிருக்கும்... அதான் சார், அந்த அம்மா அனுப்பி இருக்காங்க... நான் கொடுத்தனுப்புவேன் என்கின்ற அவங்க நம்பிக்கையை நான் பொய்யாக்க விரும்பல சார்.. நான் உழைச்சி சம்பாதிக்கிற காசு.. வந்துடும் சார்...ஆனால் இப்போதைக்கு அந்தக்குடும்பம் சாப்பிடுதுல்ல.. அதுதான் சார் முக்கியம்.

நான் உணவு தரவில்லை என்றால் அந்தக்குழந்தை வேறு ஒரு தவறான வழிக்குச் செல்லக்கூடும். அதனால் நான் நஷ்டப்பட்டாலும், இப்பொழுது நம் சமூகத்தில் நடக்க இருந்த ஒரு தவறைத் தடுக்க முடிந்திருக்கிறது.

அவர்கள் பணம் தந்தால் அது எனக்கு லாபக்கணக்கு... பணம் தராவிட்டால் அது என் புண்ணியக்கணக்கில் வரவு வைக்கப்படும்..' என்றார்.

*****

# சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது நிகழ்ந்த ஒரு உண்மை நிகழ்ச்சி ;

பூகம்பத்தின் அதிர்வுகள் ஓய்ந்த பிறகு மீட்புப் பணியாளர்கள் ஒரு இளம் பெண்ணின் வீட்டு இடிபாடுகளை நெருங்கியபோது, அந்த பெண்ணின் சடலத்தை இடையில் இருந்த ஓட்டைகளின் வழியாகக் கண்டார்கள். வழிபாடு செய்வதைப் போல, அவளது முழங்கால்கள் மடங்கி ஒரு வினோதமான நிலையில் இருந்தன. உடல் முற்றிலும் முன் குவிந்து, அவளது இரு கைகளும் ஏதோ ஒரு பொருளைப் பாதுகாத்துக் கொண்டு இருப்பதைப்போல இருந்தன.இடிபாடு அவளது முதுகு மற்றும் தலையில் விழுந்திருந்தது.மீட்புக் குழுவின் தலைவர், பல இடர்களுக்கு நடுவில் சுவற்றில் இருந்த குறுகிய ஓட்டை வழியே தனது கைகளை நுழைத்து அந்தப் பெண்ணின் உடலைத் தொட்டார்,அந்தப் பெண்மணி ஒருவேளை உயிரோடு இருக்கலாமோ என்ற எதிர்பார்ப்பில். ஆனால் விரைத்து,குளிர்ந்து போயிருந்த அவளது உடல் அவள் கண்டிப்பாக இறந்து விட்டாள் என்பதை அவருக்கு உணர்த்தியது.

அவரும், மற்ற மீட்புப் பணிக் குழுவினரும் அந்த வீட்டை விட்டு விட்டு அடுத்து இடிந்து விழுந்திருந்திருந்த கட்டிடத்திற்கு செல்லத் தயாரானார்கள்.ஏதோ சில காரணங்களால், அந்த இறந்த பெண்மணி இருந்த பாழைடைந்து விட்ட அவளது வீட்டிற்குச் செல்ல அவர் உந்தப் பட்டார். மறுபடியும் அவர் குனிந்து, அவரது கையை இடுக்குகள் வழியாக நுழைத்து அந்த இறந்த உடலின் அடியில் இருந்த இடத்தில் தேடிப் பார்த்தார்.திடீரென்று,அவர் உற்சாகத்துடன் கூச்சலிட்டார், "ஒரு குழந்தை அங்கே இருக்கிறது'' என்று. அந்தக் குழு முழுவதும் இப்போது இணைந்து பணியாற்றினார்கள்; வெகு கவனமாக, அந்தப் பெண்ணின் சடலத்தைச் சுற்றியிருந்த இடிந்து விழுந்திருந்த பொருட்களின் குவியல்களை விலக்கினார்கள்.அந்த இறந்த தாயின் சடலத்திற்கு அடியில் ஒரு போர்வையில் ஒரு மூன்று மாத குழந்தை சுற்றப்பட்டு இருந்தது. ஆம், அந்தத் தாய் தன் மகனைக் காப்பதற்காக தன் உயிரையே தியாகம் செய்திருந்தாள்.அவளது வீடு இடிந்து விழுந்து கொண்டு இருந்த போது, அவள் தன்னையே ஒரு போர்வையாகபயன் படுத்தி இருந்தாள். அந்தக் குழுத் தலைவர் அதனைத் தூக்கும் போது,அந்த குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டு இருந்தது

மருத்துவர் அந்தச் சிறு குழந்தையைப் பரிசோதிப்பதற்கு உடனே வந்தார் . அந்தப் போர்வையைப் பிரித்த போது அதற்குள் ஒரு செல்போன் இருப்பதைக் கண்டார். அதன் திரையில் ஒரு செய்தி இருந்தது.அது என்ன என்றால், "நீ இதிலிருந்து தப்பிப் பிழைத்து விட்டால், நான் உன்னை நேசிக்கிறேன்" என்பதை நினைவில் கொள்வாயாக என்பதே. அந்த செல் போன் ஒருவரிடமிந்து மற்றொருவருக்குக் காண்பிக்கப் பட்டது.அதைப் படித்த ஒவ்வொருவரும் தேம்பித் தேம்பி அழுதார்கள். தன் குழந்தை மேல் அந்தத் தாய் வைத்திருந்த அன்பு அப்படிப் பட்டது. ஒரு தாயின் தியாகத்திற்கு ஈடு இணையே கிடையாது.